# பகுதி III

# பகுதி III

## 2000 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற் கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்

**வங்கித் தொழில் திணைக்களம்**


பக்கம்

1. ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இலக்கம் 1535 சிறி (எஸ்எப்) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆளணியினர் அபிவிருத்திச் செயற்றிட்டம் இறக்குமதிகளுக்கான நடவடிக்கை முறை
   - எண்: 01/ 02/ 005/ 0018/ 008 — i
2. இந்திய/ இலங்கை கொடுகடன் உடன்படிக்கை ஐ.அ.டொலர் 15 மில்லியன் கொண்ட இரண்டாவது தொகுதி இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நடவடிக்கை முறை
   - எண்: 01/ 02/ 005/ 0018/ 009 — iv
3. வெளிநாட்டு செலாவணி நிலைமைகள் மீதான அறிக்கை
   - எண்: பீடி/ 01 / 2000 — v
4. யப்பான்/ இலங்கை சிறப்புக்கொடை யென் 35,553,000 (26ஆவது படுகடன் நிவாரணக் கொடை
   - எண்: 01/ 02/ 005/ 0018/ 011 — vi
5. இந்திய/ இலங்கை கொடுகடன் உடன்படிக்கை ஐ.அ.டொலர் 15 மில்லியன் இரண்டாவது தொகுதி இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நடவடிக்கை முறை
   - எண்: 01/ 02/ 005/ 0018/ 009-01 — vii
6. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகள் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள்
   - எண்: 01/ 02/ 005/ 0018/ 013 — ix
7. ஒதுக்குத் தேவைப்பாடுகள்
   - எண்: 01/ 02/ 005/ 0018/ 014 — xv
8. வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான வாராந்த அறிக்கை
   - எண்: 4634 — xvi
9. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு கொடுகடன் எண் 14சிஈ - சுற்றாடல் நடவடிக்கை 1 செயற்றிட்டம்
   - எண்: 01/ 02/ 005/ 0018/ 015 — xvii
10. முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்
    - எண் : 4651 — xix
11. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்
    - எண்: 01/ 02/ 005/ 0018/ 016 — xx
12. முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்
    - எண் : 4664 — xxi

13. வங்கிகளுக்கிடையிலான நாளாந்த வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல் அறிக்கை
- எண் : 4665 xxii

14. முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்
- எண் : 4669 xxiii

15. வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் xxiv

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

16. 1988இன் 30ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டம் - தீர்மானம் xxv

17. 2000ஆம் ஆண்டின் வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித் தொழில்முறை) கட்டளை xxvi

18. 1995ஆம் ஆண்டின் 33ஆம இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் - அறிவித்தல் xxix

19. 1995ஆம் ஆண்டின் 33ஆம இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் - பணிப்புரை xxx

**செலாவணிக் கட்டுப்பாட்டுத்திணைக்களம்**

20. வெளிநாட்டுச் செலாவணி விற்பனையும் கொள்வனவும் படிவம் 1 இனையும் படிவம் 2 இனையும் சமர்ப்பித்தல்
- எண் : ஈசி/ 01/ 2000 (எம்யூ) xxxi

21. பன்னாட்டு மின்னியல் கடன், பற்று அல்லது மற்றைய எந்தவொரு நிதி மாற்றல் அட்டை களுக்கும் எதிரான வெளிநாட்டுச் செலாவணி எடுப்பனவினைக் கண்காணிக்கும் திட்டம்
- எண் : ஈசி/ 02 / 2000 (டீ) xxxii

22. சரக்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும் வான்வழிப் பட்டியல்கள் / பொருட்கள் கப்பலேற்றுவதற்கான பட்டியல்கள்/ வெளிநாடுகளுக்கு சரக்குகளை கப்பலேற்றுபவர்களின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களை வழங்குதலும்
- எண் : ஈசி/ 03/ 2000 (ஜீ) xxxiv

23. கரைகடந்த வங்கித் தொழில் வாணிபம்
- எண் : ஈசி/ 04/ 2000 (டீ) xxxv

24. ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்கள்
- எண் : ஈசி/ 05/ 2000 (டீ) xxxviii

25. பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள்
- எண் : ஈசி/ 06/ 2000 (சிஅன்ட்எப்) xl

26. வெளிநாட்டு நாணயக் கணக்குகள்
- எண் : ஈசி/ 07/ 2000 (டீ) xlvii

27. சரக்குகளை கப்பலேற்றும் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம் / உள்நாட்டுப் பொருட்களின் ஏற்றுமுறி/ வெளிநாடுகளுக்கு சரக்குகளை கப்பலேற்றுபவர்களின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களை வழங்குதல்
- எண் : ஈசி/ 08/ 2000 (ஜீ) xlviii

28. வெளிநாட்டுச் செலாவணி விற்பனையும் கொள்வனவும் படிவம் 1 மற்றும் படிவம் 2இனை சமர்ப்பித்தல்
- எண் : ஈசி/ 09/ 2000 (எம்யூ) xlix

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 01/02/005/0018/008

வங்கித் தொழில் திணைக்களம்,
2000 மாச்சு 14.

முகாமையாளர்,
இலங்கை வங்கி,
மாநகரப் பிரிவு,
கொழும்பு 1.

அன்புள்ள ஐயா,

## ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இலக்கம் 1535 சிறி (எஸ்எப்) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆளணியினர் அபிவிருத்திச் செயற்றிட்டம் இறக்குமதிகளுக்கான நடவடிக்கைமுறை

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆளணியினர் அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக சிஎஉ 14,721,000இற்குச் சமமான தொகையொன்றினை (பதினான்கு மில்லியன் எழுநூற்று இருபத்தோராயிரம் மட்டும்) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (இதன்பின்னர் ஆஅவ எனக் குறிப்பிடப்படும்) இணங்கியுள்ளது. இச் செயற்றிட்டம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் செயற்படுத்தப்படும். செயற்றிட்டத்திற்கான உபகரணங்களின் இறக்குமதிக்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு (இதன் பின்னர் வி.தொ.அ எனக் குறிப்பிடபடும்) இக் கடனின் ஒரு பகுதியைப் பயன்படுத்தும். இச்செயற்றிட்டத்தின் கீழான இறக்குமதிகளைக் கையாளும்போது பின்வரும் நடவடிக்கை முறையினைப் பின்பற்றுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

2. இணைப்பு 1இல் காட்டப்பட்டபடி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் விண்ணப்பம் மேற்கொள்ளப்படுமிடத்து தகைமையுடைய மூல நாடுகளிலிருந்தான அனைத்து இறக்குமதிகளும் உங்களால் நிறுவப்பட்ட துணை நாடாத கைமீட்புச் செய்ய இயலாத உறுதி செய்யப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நாணயக் கடிதமும் பின்வரும் உறுப்புரையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> "இந்த நாணயக் கடிதமானது ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இலக்கம் 1535 சிறி (எஸ்எப்) இன்கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் அறிவுறுத்தும் / உறுதிசெய்யும் வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும்போது மட்டுமே நாணயக் கடிதம் பயனுறுவதாக அமையும். கொடுப்பனவுக்காக மேற்குறிப்பிட்ட கடப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்."

மேலே குறிப்பிடப்பட்ட உறுப்புரை நாணயக் கடிதத்தில் ஒருங்கிணைக்கப்படாவிட்டாலும்கூட, நிதி மற்றும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான உங்களது வங்கியின் கடப்பாட்டின் வலுவில் அது உடனடியாகச் செயல்படக் கூடியதாக இருக்கும். எனினும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாடு வழங்கப்படும்போது நிதியியல் கடப்பாட்டினை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நகர்த்திவிடும். இந்த விடயத்தில் நாணயக் கடிதம் பின்வரும் உறுப்புரையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> "இந்த நாணயக் கடிதத்திற்கான நிதியிடல் இலங்கை, கொழும்பு மாநகரப் பிரிவு, இலங்கை வங்கியினால் மேற்கொள்ளப்படும். எனினும், இது ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1535 சிறி (எஸ்எப்)இன் கீழ் நிறுவப்பட்டுள்ளதோடு அறிவுறுத்தும்/உறுதிப்படுத்தும் வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும்போது பின்னையவர் மேலே குறிப்பிடப்பட்ட கடப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டியதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கொடுப்பனவினை/செலவீட்டைக் கோரவேண்டும்."

உங்களது நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது வங்கியின் பேராளருக்கு முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

ஒழுங்குபடுத்தும். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் வேண்டுகோளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கினால் இந்தக் கடிதத்தின் இணைப்பு 2இல் காட்டப்பட்டுள்ளவாறான படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட வர்த்தக வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும்.

3. (i) நாணயக் கடிதத்தில் பின்வருவனவற்றை உட்படுத்தும் திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் எழுத்து மூலமான ஒப்புதல் தேவைப்படும்.

(அ) நாணயம் மற்றும் நாணயக் கடிதத்தின் தொகை என்பனவற்றை உள்ளடக்கிய கொடுப்பனவு நியதிகள்.

(ஆ) விளக்கக் குறிப்பு அல்லது பொருட்களின் தொகை.

(இ) நன்மை பெறுநர்.

(ஈ) மூல நாடு அத்துடன்

(உ) இறுதி நாளுக்கு அப்பால் அதாவது கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான இறுதி நாளாகிய 2002 திசெம்பர் 31ஆம் நாளுக்கு அப்பால் நாணயக் கடிதத்தின் காலாவதித் திகதியின் நீடிப்பு.

மேலே (அ)இலிருந்து (உ) வரையிலானவற்றில் உள்ளடக்கப்படாத திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் தேவைப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களின் ஒப்புதலுக்கான கோரிக்கைகள், இணைப்பு 3இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சினால் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உங்களினால் கைச்சாத்திடப்பட்ட திருத்தங்களின் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் நாணயக் கடிதத்திற்கான திருத்தமானது பின்வரும் ஏற்பாட்டினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

> "இந்தத் திருத்தமானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒப்புதல் வழங்கப்படும்போது பயனுறுவதாக அமையும்".

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கப்பட்டால் இக்கடிதத்தின் இணைப்பு 4இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் உங்களது வங்கியின் பேராளருக்கும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் தெரியப்படுத்தப்படும்.

(ii) ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதலின்றி கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான கடைசித் திகதிவரை, காலாவதியாகும் தினமும் கப்பலேற்றும் தினமும் நீடிக்கப்படலாம். அத்தகைய நீடிப்பு மேற்கொள்ளப்படுமிடத்து உங்களது வங்கியின் மேலாண்மைபெற்ற அலுவலர் ஒருவரினால் பொருத்தமான முறையில் கைச்சாத்திடப்பட்ட நீடிப்பின் பிரதியொன்று இணைக்கப்பட்டதும் இக்கடிதத்தின் இணைப்பு 3இல் காட்டப்பட்டுள்ளதுமான படிவத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட்டாலும், உட்படுத்தப்படாவிட்டாலும் ஒவ்வொரு திருத்தத்தினதும் இரண்டு பிரதிகள் உங்களது வங்கியினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு தேவையானவிடத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கல்களுக்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் நியதிகளின்படி நன்மை பெறுநருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது உங்களது வங்கியின் பேராளர், சம்பந்தப்பட்ட ஆவணங்களை உங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியதோடு இக்கடிதத்தின் இணைப்பு 5இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து செலவீட்டைக் கோர வேண்டும். செலவீட்டுக்கான கோரிக்கையின் பிரதியொன்றினையும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கு உங்களது வங்கியின் பேராளர் அனுப்பி வைத்தல் வேண்டும். உடனடியான பகிர்ந்தளிப்புக்கு வசதிசெய்து கொடுப்பதற்காக இந்தக் கடிதத்தின் இணைப்பு 6இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உங்களது வங்கியின் பேராளர் உறுதிப்படுத்தப்பட்ட சுவிப்ட், ரெலெக்ஸ் அல்லது கேபிள் கோரிக்கையொன்றினை அனுப்பி வைக்கலாம். உங்களது பேராளருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி செலவீட்டை மேற்கொண்டுள்ளதா என்பதை அதிகூடிய விரைவில் உங்களுடைய வங்கிக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டியதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு செலவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என நீங்கள் திருப்திப்படும்வரை உங்களது பேராளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கப்பலேற்றல் ஆவணங்களை நீங்கள் வைத்திருத்தல் வேண்டும். ஆவணங்களை விடுவிக்கும் நேரத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிலிருந்து எத்தகைய இணைக்கிணை நிதியமும் சேகரிக்கப்படலாகாது.

5. கப்பலேற்றும் ஆவணங்களுக்கும் நாணயக் கடிதங்களின் நியதிகளுக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் கொடுப்பனவுக்கான கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுவதற்கோ அல்லது (கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்) வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுக் கடிதத்தினை ஏற்றுக்கொள்ளுவதற்கோ ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இயலாது காணப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வர்த்தக வங்கி அத்தகைய வேறுபாடுகளின் மத்தியிலும் கொடுப்பனவினை மேற்கொள்ளுவதற்காக உங்களின் மூலமாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் அங்கீகாரத்தினைக் கோர வேண்டும்.

உங்களுடைய வங்கியுடன் கலந்தாலோசித்து விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு கொடுப்பனவுக்கான அங்கீகாரத்தினை வழங்கிய பின்னர் அத்தகைய வேறுபாடு சம்பந்தமாகவும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பாகவும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தந்தி மூலம் அறிவித்தல் வேண்டும்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயமொன்றினால் கடப்பாடு வழங்கப்பட்டிருக்கும் வேளையில் அத்தகைய கடப்பாட்டின்கீழ் கொடுப்பனவுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயம் கிடைக்கத்தக்கதாக இருக்குமென ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்பார்க்கும் செலாவணி வீதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகையினைக் கடப்பாட்டுக் கடிதம் குறித்துரைக்கும். உங்களது வங்கியின் பேராளர்களில் எவரேனும் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயத்தில் கோரிய ஏதேனும் குறிப்பிட்ட உரிமை கோரல் விடயத்தில் ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாட்டின்கீழ் கிடைக்கத்தக்கதாக உள்ள தொகையினை விஞ்சுமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியானது கிடைக்கத்தக்கதாகவுள்ள ஐக்கிய அமெரிக்க டொலரின் அளவு ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயங்களின் செலவீட்டை மட்டுப்படுத்தும். இதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் உங்களது நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட உரிமை கோரல் சம்பந்தமாக உங்களது வங்கியின் பேராளருக்கான முழுமையான செலவீட்டை அல்லது பகுதியொன்றினைச் செலுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மறுப்புத் தெரிவிக்குமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அனுமதிக்கப்படாத தொகையினை உங்களது வங்கியின் பேராளருக்கு உங்களது வங்கி அனுப்பி வைக்கலாம். இந்த நோக்கத்திற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுடன் நீங்கள் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம்.

7. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளர் உங்களுக்கு அறிவிப்பார்.

8. உங்களது அனைத்துக் கட்டணங்களும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கணக்கிற்காக இருத்தல் வேண்டும்.

உங்களின் உண்மையுள்ள

எம். பீ. திசாநாயக்க

முதன்மைக் கணக்காளர்

பிரதி: 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2. செயற்றிட்டப் பணிப்பாளர்
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆளணியினர் அபிவிருத்திச் செயற்றிட்டம்
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
எண் 320 ரி.பி. ஜயா மாவத்தை
கொழும்பு 10

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : 01/02/005/0018/009

வங்கித் தொழில் திணைக்களம்

5 ஏப்பிறல் 2000

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

## இந்திய / இலங்கை கொடுகடன் உடன்படிக்கை ஐ.அ.டொலர் 15 மில்லியன் கொண்ட இரண்டாவது தொகுதி இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நடவடிக்கைமுறை

இந்திய அரசானது, இந்திய தொடர்க் கொடுகடன்களின் கீழ் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளல் மற்றும் நாணயக் கடிதங்களைத் திறத்தல் ஆகியவற்றிற்கான முடிவுத் திகதியை 31.05.2000 வரையிலும் இந்தியாவிலிருந்து மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பிலான பகிர்ந்தளிப்புத் திகதியை 31.05.2001வரையிலும் நீடித்திருப்பதனை அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

2. 1996 ஒத்தோபர் 14ஆம் திகதியிடப்பட்டதும் எண் பீடி/ 07/ 96 கொண்டதுமான எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

எம். பீ. திசாநாயக்க

முதன்மைக் கணக்காளர்

படிகள். 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2. பணிப்பாளர் நாயகம்

வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

சுற்றறிக்கை எண்: பீடி/ 01/ 2000

வங்கித் தொழில் திணைக்களம்

19 யூன் 2000

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

## வெளிநாட்டு செலாவணி நிலைமைகள் மீதான அறிக்கை

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளும் தொங்கற் கணக்குகள் மற்றும் நொஸ்ரோ கணக்குகள் உட்பட அவற்றின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமைகளை கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலும் அவற்றின் கிளைகளிலும் வைத்திருக்கப்படும் அனைத்து வெளிநாட்டு நாணயங்களிலும் வெவ்வேறாக 2000ஆம் ஆண்டு யூன் 19ஆம் நாளன்று வாணிபம் முடிவடைந்த வேளையில் உள்ளவாறு மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு (தொலைநகல் எண்கள் 346284, 346282) உடனடியாக அறிக்கையிடுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

ஒப்பம்

வை. எம்.இடபிள்யூ. பி. வீரசேகர — முதன்மைக் கணக்காளர்

ஏ.எஸ். ஜயவர்த்தன — ஆளுநர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் 01/ 02/ 005/ 0018/ 011

வெளிநாட்டு நிதிப் பிரிவு,
வங்கித் தொழில் திணைக்களம்,
தொலைபேசி: 477078
2000 யூலை 05.

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

**யப்பான்/இலங்கை சிறப்புக்கொடை யென் 35,553,000**
**(26ஆவது படுகடன் நிவாரணக்கொடை)**

1. தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளிலிருந்தான இறக்குமதிகளை நிதியிடுவதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கு யப்பானிய அரசினால் வழங்கப்பட்ட கொடையொன்றின் கீழான இறக்குமதிகளைக் கையாளும் வர்த்தக வங்கிகள் இவ்வறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இக்கொடையின் கீழ் இறக்குமதிகளுக்கான ஒதுக்கீடுகள் வெளிநாட்டு மூலவளங்களின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும்.

2. ஒதுக்கீட்டினைப் பெற்றுள்ளவர், வழங்குநருடனான தனது ஒப்பந்தத்தின் பிரதியொன்றுடனும், இந்நோக்கத்திற்காக வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரமளிக்கப்பட்ட கடிதமொன்றுடனும் விண்ணப்பத்தினை மேற்கொள்ளும்போது வர்த்தக வங்கியொன்று வழங்குநரின் நாட்டிலுள்ள பேராளரினூடாக வழங்குநரின் சார்பில் கைமீட்புச் செய்ய இயலாத நாணயக் கடிதமொன்றினை நிறுவலாம். அத்தகைய நாணயக் கடிதம் ஒவ்வொன்றும் நிறுவும் வங்கியின் அடையாள இலக்கத்தினை உடனடுத்து "1ஆவது யென் கொடை 2000" எனக் குறிப்பிடப்பட்ட முன்தொடர் இலக்கமொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியானது, யப்பான், ரோக்கியோவிலுள்ள வரையறுக்கப்பட்ட ரோக்கியோ மிற்சுபிசி வங்கி உலகளாவிய வங்கிப் பணிப்பிரிவில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் யென் சாதாரண வைப்புக் கணக்கு எண் 3082399இல் பற்று வைப்பதன்மூலம் செலவீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை ஒவ்வொரு நாணயக் கடிதமும் குறித்துரைத்தல் வேண்டும். செலவீட்டிற்கான கோரிக்கையானது, ஆவணங்கள் நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இசைவாக உள்ளன எனவும், ஆவணங்கள் கடன் திறக்கப்பட்ட வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய கடன் நிறுவப்பட்டதன் பின்னர் கடன் வழங்கும் வங்கியானது ஒவ்வொரு நாணயக் கடிதத்தினதும் இரண்டு பிரதிகளை, இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதன் பின்னர் அவர் கடன் தொடர்பான செலவீட்டு அனுமதியினை வரையறுக்கப்பட்ட டோக்கியோ மிற்சுபிசி வங்கி, டோக்கியோ, யப்பான் என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பார். இந்த அனுமதியின்றி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு செலவீடு மேற்கொள்ளப்படமாட்டாது.

4. கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவுடன் ஆவணங்களின் பெறுமதியின் இலங்கை ரூபாவிற்குச் சமமான தொகையினைச் சேகரித்துக்கொண்டதன் பின்னர் மட்டுமே கடன் திறக்கும் வங்கி அவற்றினை இறக்குமதியாளருக்கு விடுவித்தல் வேண்டும். இறக்குமதியாளருக்கு அத்தகைய ஆவணங்களை விடுவிப்பதற்கு முன்னர் ஆவணங்களின் முழுப் பெறுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட வங்கியினால் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட 10 நாட்களுக்குள் இறக்குமதியாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியான 10 நாட்களுக்குள் ஆவணங்களின் பெறுமதியினை இறக்குமதியாளர் செலுத்தத் தவறினால் வங்கியிலிருந்து ஆவணங்கள் பெறப்பட்டதற்கான அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நாளிலிருந்து இறக்குமதியாளரினால் உண்டியல் தீர்க்கப்படும் நாள்வரை வங்கி வீதத்திற்கு மேலதிகமாக ஆண்டொன்றிற்கு 3% வட்டி செலுத்தவேண்டி ஏற்படும்.

6. இறக்குமதியாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினை இலங்கை மத்திய வங்கியிலுள்ள இணைக்கிணை நிதிய கணக்கிற்குச் செலுத்தும்போது வர்த்தக வங்கி இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை மேற்கோள்காட்டி பின்வரும் தகவல்களைத் தருதல் வேண்டும்.

(அ) இறக்குமதியாளரின் பெயரும் முகவரியும்.

(ஆ) நாணயக் கடிதத்தின் எண்.

(இ) ஏற்றுமதியாளரின் பெயர்.

(ஈ) யென்னுக்குச் சமமான தொகை (ஆவணங்கள் வேறு ஏதேனும் மாற்றத்தக்க நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பின் குறித்துக் காட்டப்படுதல் வேண்டும்)

(உ) பிரயோகிக்கப்படும் செலாவணிவீதம் (யப்பானிய யென் வீதமும் எதிர்முகமாக நாணயக் கடிதம் திறக்கப்பட்ட நாணயத்திற்கான வீதமும் உட்பட)

(ஊ) ஆவணங்கள் பெறப்பட்ட திகதி.

(எ) இறக்குமதியாளருக்கான அறிவுறுத்தல் திகதி.

(ஏ) இறக்குமதியாளரினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி.

7. கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் கப்பலேற்றல் தொடர்பாக பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு பிரதியினையும் இணைப்பதனை வர்த்தக வங்கிகள் உறுதி செய்துகொள்ளல் வேண்டும்.

(i) பொருட்களின் விலைப்பட்டியல்.

(ii) ஏற்றுமுறி/வான்வழிக் கட்டணம்.

(iii) வழங்குநருக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி மற்றும் கொடுப்பனவுத் தொகை என்பனவற்றிற்கான சான்று ஆவணங்கள்.

**வை. எம். டபிள்யூ. பீ. வீரசேகர**

முதன்மைக் கணக்காளர்

பிரதி: 1. வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளர் நாயகம்
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
செயலகம்
கொழும்பு-1

2. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொழிற்பாட்டு எண் : 01/ 02/ 005/ 0018/ 009 - 01

வங்கித் தொழில் திணைக்களம்

*11 யூலை 2000*

***அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்***

## இந்தியா/ இலங்கை கொடுகடன் உடன்படிக்கை ஐ.அ.டொலர் 15 மில்லியனின் இரண்டாவது பிரிவு இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நடைமுறை

இந்திய அரசானது இந்திய தொடர் கொடுகடன்களின் கீழ் ஒப்பந்தங்களை மேற் கொள்ளல் மற்றும் நாணயக் கடிதங்களை திறத்தல் என்பனவற்றிற்கான முடிவுத் திகதியை 30.11.2000 வரையிலும் இந்தியாவிலிருந்து மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பான பகிர்ந்தளிப்புத் திகதியை 30.11.2001 வரையிலும் நீடித்துள்ளமையை அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

*1996* ஒத்தோபர் *14*ஆம் நாளிடப்பட்ட எண் பீடீ/07/96 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

**வை. எம்.இடபிள்யூ. பி. வீரசேகர**

முதன்மைக் கணக்காளர்

படி: 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2. பணப்பாளர் நாயகம்

வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

சுற்றறிக்கை எண் : 01/ 02/ 005/ 0018/ 013

வங்கித் தொழில் திணைக்களம்

26 யூலை 2000

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**முதனிலை வணிகர்களுக்கும்**

## இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகள் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள்

இலங்கை மத்திய வங்கியின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகளின் முதிர்ச்சிக் காலம் 26.7.2000 ஆம் நாள் தொடக்கம் ஆகக் கூடியது 7 நாட்களுக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றோம். இவ்வசதிகள் தொடர்பான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள் இணைப்புக்கள் I - III இல் தரப்பட்டுள்ளன.

வை.எம். டபிள்யூ. பீ. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

# இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகள் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள்

(அ) மீள் கொள்வனவு வசதி

(i) இதனகத்துப் பின்னர் பங்கேற்கும் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும் அரச பிணையங்களிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் இலங்கை மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வசதியில் பங்கேற்க தகமையுடையனவாகும்.

(ii) மீள் கொள்வனவுகள் ஓரிரவிலிருந்து ஏழு நாட்கள்வரை கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

(iii) சந்தையிலுள்ள திரவத் தன்மை மட்டத்தினை மதிப்பீடு செய்ததன்பின் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் குழு மீள் கொள்வனவு வீதத்தினை தீர்மானிப்பதுடன் இது ரொயிட்டர் திரையில் நாளாந்த அடிப்படையில் மு.ப, 9.30 மணிக்கு அறிவிக்கப்படும்.

(iv) மீள்கொள்வனவு வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் மீள் கொள்வனவு வணிகம் பற்றிய தொகை மற்றும் காலப்பகுதி பற்றி வங்கித் தொழில் திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாட்டு பிரிவிற்கு தொலைபேசி மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ அறிவிக்குமாறும் அதே நாளன்று 30 நிமிடங்களுக்குள் ஆனால் பி.ப. 2.30 இற்குப் பிந்தாமல் இவ்வணிகம் பற்றிய விடயங்களை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(v) அதன் பின்னர் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவு மீள் கொள்வனவு உடன்படிக்கையைத் தயாரித்து தொடர்பான பங்கேற்கும் நிறுவனத்திற்கு தொலை நகலில் அனுப்பும். பங்கேற்கும் நிறுவனம் சரியாக கையொப்பமிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட உடன்படிக்கையை தொலை நகல் மூலம்/ நேரடியாக வங்கித் தொழில் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு பிரிவிற்கு அதே நாள் பி.ப.3.00 இற்குப் பிந்தாமல் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(vi) மீள் கொள்வனவு உடன்படிக்கை நிறைவடைந்ததும் (இணைப்பு II) மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான கணக்குகளில், குறிப்பிடப்பட்ட பிணையங்களின் அதாவது திறைசேரி உண்டியல் / உண்டியல்களின விற்பனைப் பெறுமதி பற்று வைக்கப்படும்.

(vii) மீள் கொள்வனவின் கீழ் திறைசேரி உண்டியல்/ உண்டியல்களின் விற்பனைப் பெறுமதியானது தொடர்பான மீள் கொள்வனவு வீதத்தினால் மீள் கொள்வனவுக் காலப்பகுதிக்காக தொடர்பான திறைசேரி உண்டியல் / உண்டியல்களின் கழிவிடலின் மூலம் கணிக்கப்படும்.

(viii) விற்பனைப் பெறுமதி அத்துடன் மீள் கொள்வனவின் முதிர்ச்சியில் உடன்படிக்கைகளின் காலப்பகுதிக்கான கூட்டுவட்டி என்பனவற்றை உள்ளடக்கிய மீண்டும் வாங்கிய பெறுமதி, தொடர்பான கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

(ix) குறிப்பிட்ட திறைசேரி உண்டியல் முதலீட்டாளரிடம் வழங்கப்படமாட்டாது. ஆயினும் அது மத்திய வங்கியின் பாதுகாப்பில் வைத்திருக்கப்படும்.

(x) மீள் கொள்வனவிற்காக பங்கேற்கும் நிறுவனங்களுடன் மத்திய வங்கி பயன்படுத்தப்படவுள்ள உத்தேச உடன்படிக்கையின் மாதிரியொன்று இணைப்பு II இல் தரப்பட்டுள்ளது.

(ஆ) நேர்மாற்று மீள் கொள்வனவு வசதி

(i) இதனகத்துப் பின்னர் பங்கேற்கும் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும் அரச பிணையங்களிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியில் பங்கேற்பதற்கு தகைமையுடையனவாகும்.

(ii) நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகள் ஓரிரவிலிருந்து ஏழு நாட்கள் வரையில் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

(iii) நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின் கீழ் இலங்கை மத்திய வங்கி உடன்பாடு காணப்பட்ட விலையில் உடன்பாடு காணப்பட்ட நாளன்று மீண்டும் விற்பனை செய்யப்பட வேண்டுமென்ற உடன்படிக்கையுடன் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து திறைசேரி உண்டியல்/ முறி/ முறிகளைக் கொள்வனவு செய்யும்.

(iv) நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் மீள் கொள்வனவு வணிகம் பற்றிய தொகை மற்றும் காலப்பகுதி பற்றி வங்கித் தொழில் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவிற்கு தொலைபேசி மூலமோ அல்லது தொலை நகல் மூலமோ அறிவிக்குமாறும் அதே நாளன்று 30 நிமிடங்களுக்குள் ஆனால் பி.ப. 2.30 இற்குப் பிந்தாமல் இவ்வணிகம் பற்றிய விடயங்களை எழுத்தில் உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(v) வணிகம் உறுதிப்படுத்தப்பட்டமையை உடனடுத்து, ஆனால் அதே நாளன்று பி.ப. 2.30 மணிக்குப் பிந்தாமல் நேர்மாற்று மீள் கொள்வனவுக்கு எதிரான தொடர்பான திறைசேரி உண்டியல்/முறி/ முறிகளை இலங்கை மத்திய வங்கியின் பெயரில் சரியாகப் புறக்குறிப்பீடிட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படும். கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கத்தக்க போதுமானளவு முகப்புப் பெறுமதியுடன் குறிப்பிடப்பட்ட திறைசேரி உண்டியல்/ முறி / முறிகளை இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பில் வைத்திருக்க விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் மீது தேவையான புறக் குறிப்பீடுகளை செய்வதன் மூலம் அவ்வாறு செய்யலாம். நேர்மாற்று மீள் கொள்வனவு முதிர்ச்சியின்போது பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியிலிருந்து திறைசேரி உண்டியல்கள்/ முறி/ முறிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

(vi) இலங்கை மத்திய வங்கியானது, பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து உடன்பாடு காணப்பட்ட வாங்கும் விற்கும் விலைகளையும் முறையே வணிகம் செய்யப்பட்ட நாளன்றும் உடன்படிக்கை முதிர்ச்சியடையும் நாளன்றும் அவர்களது கணக்குகளில் வரவு வைக்கப்படுவதற்கும் பற்றுவைக்கப்படுவதற்குமுள்ள தொகைகளையும் காட்டுகின்ற குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/ முறி/ முறிகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் இந்நோக்கத்திற்காக சரியான முறையில் கையொப்பமிடப்பட்ட விதித்துரைக்கப்பட்ட நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கையை தொலைநகலில் அனுப்பும்.

(vii) அங்கீகரிக்கப்பட்டவர்களினால் சரியான முறையில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையை இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவிற்கு அதேநாளன்று பி.ப. 3.00 மணியளவில் தொலைநகல் மூலமாக அல்லது நேரடியாக அனுப்பிவைக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இந் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற அலுவலர்களின் பெயர்களும், அவர்களது கையொப்பங்களும் அனைத்துப் பங்கேற்கும் நிறுவனங்களினாலும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின்கீழ் பங்கேற்பதற்கு முன்னர் வங்கித் தொழில் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் மேலே குறித்துரைக்கப்பட்ட தொடர்பான திறைசேரி உண்டியல்கள் மற்றும் உடன்படிக்கைகளைப் பெற்றுக்கொண்டதன்பின் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படும்.

(ix) இலங்கை மத்திய வங்கியிலுள்ள தகுதிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்களின் கணக்குகளில், மேற்குறிப்பிட்ட (vii) நியதிகளுக்குள்பட்டு குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/ முறி/ முறிகளின் கொள்வனவுப் பெறுமதி வரவு வைக்கப்படும்.

(x) குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/ முறி/ முறிகளின் கொள்வனவுப் பெறுமதியானது, இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படவிருக்கும் எல்லை இலாபத்தினால் சீராக்கப்படும் திறைசேரி உண்டியல்/ முறி/ முறிகளுக்கான தொடர்பான நடைமுறை முதனிலைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் அதன் முதிர்ச்சியில் உள்ள நாட்களின் எண்ணிக்கைக்கேற்ப உண்டியல்/ முறி/ முறிகளின் கழிவிடல் மூலம் கணிக்கப்படும்.

(xi) உடன்படிக்கை முதிர்ச்சியடையும்போது, கொள்வனவுப் பெறுமதியையும், திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவினால் நிர்ணயிக்கப்படுகின்றவாறான வீதத்தில் கணிக்கப்படும் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியதான மீள்விற்பனை பெறுமதியானது தொடர்பான கணக்குகளில் பற்று வைக்கப்படும்.

(xii) பங்கேற்கும் நிறுவனங்களுடனான நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிக்காக மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படவுள்ள உத்தேச உடன்படிக்கையின் மாதிரியொன்று இணைப்பு III இல் தரப்பட்டுள்ளது.

இணைப்பு11

தொலைபேசி எண்: 477042, 422094

தொலைநகல் எண்: 421192. 422094

திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவு

வங்கித் தொழில் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

## மீள் கொள்வனவு உடன்படிக்கை
## உடன்படிக்கை எண் ..........

மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் கீழே தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டவாறான, இலங்கை அரசின் திறைசேரி உண்டியல்களை தங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையை நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

1. திறைசேரி உண்டியல் எண் :
2. முதிர்ச்சி நாள் :
3. திறைசேரி உண்டியலின் முகப்புப் பெறுமதி (மில்) :
4. மீள் கொள்வனவிற்காக உடன்பட்ட தொகை :
5. விற்பனை நாள் (செல்லுபடியாகும் நாள்) :
6. மீள் கொள்வனவு நாள் (முதிர்ச்சியடையும் நாள்) :
7. காலப்பகுதி (நாட்களின் எண்ணக்கை) :
8. ஆண்டிற்கான வீதம் % (விளைவு) :
9. விலை (ஒவ்வொரு ரூ.100 இற்கும் ரூ.) :
10. கழிவிடப்பட பெறுமதி :
11. தீர்ப்பனவு :

நாம் விற்பனை நாளன்று எங்களுடனான உங்கள் க/கு இலக்கம் ..................... இலிருந்து ரூ. .............. இனை பற்று வைப்பதுடன் (கழிவிடப்பட்ட பெறுமதி) மீள் கொள்வனவு நாளன்று ரூ. ......................... இனை வரவு (கழிவிடப்பட் பெறுமதி + வட்டி) வைப்போம்.

உடன்படிக்கைக் காலப்பகுதியில் மேற் குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்கள் உங்கள் சார்பில் எமது பாதுகாப்பில் வைத்திருக்கப்படும்.

...................................................

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம்

மத்திய வங்கி

...................................................

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம்

மத்திய வங்கி

நாம் உடன்படுகின்றோம்

...................................................

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம்

(முதனிலை வணிகர்கள்)

முத்திரை

...................................................

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம்

(முதனிலை வணிகர்கள்)

முத்திரை

தொலைநகல் எண்:

கவனத்திற்கு :

தயவுசெய்து இன்று 12.00 மணிக்கு முன்னர் தொலை நகலிடவும்.

தொலைபேசி எண்: 477044, 477622, 422094

தொலைநகல் எண்: 421192. 421194, 477701, 477702

திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவு
வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
மாடி 8 வடகோபுரம்
தலைமை அலுவலகக் கட்டடம்
கொழும்பு 1

## நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை
## உடன்படிக்கை எண் :

கீழே தரப்பட்டுள்ள விபரங்களிலுள்ளவாறு மீண்டும் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் இலங்கை அரசின் திறைசேரி உண்டியல் (களை) முறிகள் (களை) உங்களிடமிருந்து கொள்வனவு செய்துள்ளோம் என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

| 1. திறைசேரி உண்டியல்/ முறி எண் | முறித் தொடர்கள்* | முதிர்ச்சி | கொள்வனவு விலை | விற்பனைக்கு விடப்பட்ட அளவு (முகப்புப்பெறுமதி) (ரூபா) | கொள்வனவுப் பெறுமதி) (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | மொத்தம் | | |

கோரப்பட்ட தொகை ____________

2. மீள் விற்பனை நாள் (முதிர்ச்சி நாள்)
3. காலப்பகுதி (நாட்களின் எண்ணிக்கை)
4. வட்டி வீதம் (%)
5. மீள் விற்பனைப் பெறுமதி
6. தீர்ப்பனவு;

நாம் திறைசேரி உண்டியல் (கள்) திறைசேரி முறி (கள்) என்பனவற்றின் வழங்கலின் பேரிலான கொள்வனவு நாளன்று, எங்களுடனான உங்கள் க/கு இலக்கம் ....................இற்கு ரூ. ......................இனை வரவு வைக்கவும், மேற்குறிப்பிட்ட க/கிலிருந்து உண்டியல் (கள்) முறிகளின் மீள் விற்பனை நாளன்று ரூ..................... பற்று வைக்கவும் (மீள் விற்பனைப் பெறுமதி) உள்ளோம். எங்கள் பெயரில் சரியாக புறக்குறிப்பீடு செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட திறைசேரி உண்டியல் (களை) முறி (களை) கொள்வனவு

நாளன்று இலங்கை மத்திய வங்கியிடம் கையளிக்க வேண்டும். இவைகள் மீள விற்பனை செய்யப்படும் நாளன்று புறக்குறிப்பீடு செய்யப்பட்டு உங்களிடம் கையளிக்கப்படும்.

| | |
|---|---|
| ................................................ | ................................................ |
| அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம் | அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம் |
| மத்திய வங்கி | மத்திய வங்கி |

நாம் உடன்படுகின்றோம்

| | |
|---|---|
| ................................................ | ................................................ |
| அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம் | அங்கீகரிக்கப்பட்ட ஒப்பம் |
| முதனிலை வணிகர்கள்/ வர்த்தக வங்கி | முதனிலை வணிகர்கள்/ வர்த்தக வங்கி |

முத்திரை

கவனத்திற்கு :

தொலைநகல் எண்:

தயவுசெய்து இன்று 14.00 மணிக்கு முன்னர் தொலை நகல் மூலம் உறுதிப்படுத்தவும்.

* பொருந்துமிடத்து.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : 01/ 02/ 005/ 0018/ 014

வங்கித் தொழில் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

சனாதிபதி மாவத்தை

கொழும்பு 1

1 ஒகத்து 2000

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10 (இ), 93, 94, 96 மற்றும் 97 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் செய்யப்பட்டதும் , இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2000ஆம் ஆண்டு ஒகத்து 1ஆம் நாள் எண் 1143/ 12 கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான அறிவித்தல் தொடர்பாகத் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இலங்கை நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக அத்தகைய மொத்த வைப்புப் பொறுப்புக்களில் 11 சதவீதத்திற்குச் சமமான தொகையை ஒதுக்காகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

3. வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஏற்றுக் கொண்டமையின் விளைவாக அடையப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக ஒதுக்குகளைப் பேணுமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படவில்லை.

4. மேற் குறிப்பிட்ட திருத்தங்கள் 2000ஆம் ஆண்டு ஒகத்து 4ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். 1997 சனவரி 16ஆம் நாளிட்டப்பட்டதும் பீடி/ 01/ 97 எண் கொண்டதுமான தொழிற்பாட்டு அறிவுறுத்தலினால் திருத்தப்பட்டவாறான 1994 பெப்புருவரி 11ஆம் நாளிடப்பட்டதும் பீடீ 03/ 94 எண் கொண்டதுமான எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் காணப்படும் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பான மற்றைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் பொருந்துவனவாக இருக்கும்.

**வை. எம்.இடபிள்யூ. பி. வீரசேகர**

முதன்மைக் கணக்காளர்

சுற்றறிக்கை எண். 4634

இலங்கை மத்திய வங்கி
வங்கித் தொழில் திணைக்களம்
சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
7 ஒகத்து 2000

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

## வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான வாராந்த அறிக்கை

2000ஆம் ஆண்டு ஒகத்து 11ஆம் நாள் தொடக்கம் ஐ.அ.டொலருக்கு மாற்றப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட மொத்த வைப்புப் பொறுப்புக்கள் மீதான வாராந்த அறிக்கையை ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை வாணிபம் முடிவடைந்த வேளையில் உள்ளவாறு அல்லது புதன்கிழமை வங்கி விடுமுறை தினமாக இருக்குமிடத்து அதற்கு முன்வரும் இறுதி வேலைநாளன்று உள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டுமென உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக, வங்கித் தொழில் திணைக்களமானது பல்வேறுபட்ட வெளிநாட்டு நாணயங்களை ஐ.அ.டொலருக்கு மாற்றுவதற்குப் பொருத்தமான ஐ.அ.டொலர் குறுக்கு வீதங்களை ஒவ்வொரு புதன் கிழமையும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் அறிவிக்கும்.

மேற்குறிப்பிட்ட வாராந்த அறிக்கையானது வெள்ளிக் கிழமையன்று அல்லது ஒவ்வொரு வாரத்தின் இறுதி வேலை நாளன்றும் நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளரை வந்தடைதல் வேண்டும்.

மேற்குறிப்பிடட தகவல்கள் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கு நிலைமையினைக் கண்காணித்துக் கொள்ளல் மற்றும் நாணய மற்றும் செலாவணிவீதக் கொள்கைகளை மிகப் பயனுள்ள விதத்தில் நடைமுறைப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காகத் தேவைபடுகின்றன.

வை. எம்.இடபிள்யூ. பி. வீரசேகர
முதன்மைக் கணக்காளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : 01/ 02/ 005/ 0018/ 015

வெளிநாட்டு நிதிப் பிரிவு

வங்கித் தொழில் திணைக்களம்

02 ஒத்தோபர் 2000

முகாமையாளர்

இலங்கை வங்கி

மெட்ரோபொலிட்டன் இறக்குமதிக் கிளை

கொழும்பு

**பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு கொடுகடன் எண் 14சிஈ – சுற்றாடல் நடவடிக்கை 1 செயற்றிட்டம்**

உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தலைப்பிடப்பட்ட கடனின் கீழான இறக்குமதிகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கை முறைகள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

1. செயற்றிட்டப் பணிப்பாளர் சுற்றாடல் நடவடிக்கை 1 செயற்றிட்டம் வனவள சுற்றாடல் அமைச்சு, எண் 104ஏ, கித்துள் வத்த வீதி, கொழும்பு 8 இனது சார்பில் தங்களது வங்கியினால் நிறுவப்பட்ட உறுதிப்படுத்தப்பட்டதும் கைமீட்புச் செய்ய இயலாததும் துணை நாடாததுமான நாணயக் கடிதங்களுக்கெதிராக இறக்குமதிகளை மேற்கொள்ளலாம்.

2. நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கு தங்களுடைய வங்கிக்குரிய மேலாண்மையானது "ப.அ. அமைப்பு கொடுகடன் 14சிஈ – சூழல் நடவடிக்கை 1 செயற்றிட்டம்" என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டு மூலவளங்களின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதங்களேயாகும்.

3. தங்களது வங்கியினால் திறக்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும், என்னால் வேறு வகையில் மதியுரை வழங்கப்பட்டாலன்றி, கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் செலவீடு மேற்கொள்ளப்படுமென்பதனைக் குறிப்பிடுவதோடு, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் சார்பில் தனது சிறப்புக் கடப்பாட்டினை வழங்கும்போதே நாணயக்கடிதம் தொழிற்படத் தொடங்கும் என்பதனையும் கவனித்தல் வேண்டும்.

4. உங்கள் வாடிக்கையாளர்களினால் படிவம் 1931இல் (பிரிவெடை இணைக்கப்பட்டுள்ளது) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிற்குச் செய்யப்படும் சிறப்புக் கடப்பாடுகளுக்கான விண்ணப்பங்கள் பின்வரும் ஆவணங்களையும் சான்றுகளாக கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) மேற் கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தத்தின் அல்லது கொள்வனவுக் கட்டளையின் பிரதி ஒன்று

(ஆ) தங்களது வங்கி வழங்க உத்தேசித்துள்ள நாணயக் கடிதங்களின் இரண்டு பிரதிகள்

5. கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியானது ஒவ்வொரு நாணயக் கடிதத்திலும் மேற் கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் பிரதிகளை பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிற்கு வழங்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட வேண்டும். பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது பின்வரும் திருத்தங்கள் தொடர்பில் தனது எழுத்து மூலமான ஒப்புதலை வழங்கும்.

(அ) நாணயக் கடிதத்தின் பெறுமதி

(ஆ) பொருட்களின் விபரம் அல்லது அளவு

(இ) நன்மை பெறுநர் ; அல்லது

(ஈ) நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் திகதியை அதன் மூலத் திகதிக்கு அப்பால் ஆறுமாதங்களுக்கு மேலாக அல்லது பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட சிறப்புக் கடப்பாட்டில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அப்பாலோ நீடித்தல்.

ஏனைய எந்தத் திருத்தங்களுக்கும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் முன் ஒப்புதல் தேவையில்லை.

6. தலைப்பிடப்பட்ட தொடர் கடனானது சிறப்பு எடுப்பனவு உரிமையில் வகைப்படுத்தப்பட்டமையால், வேறொரு நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களைப் பொறுத்தவரையில், பன்னாட்டு அபிவிருத்தியமைப்பானது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்கான தனது சிறப்புக் கடப்பாட்டுப் பத்திரங்களில் சிஎஉ கடப்பாடு பற்றி, தனிப்படக் குறிப்பிடும். தனது கடப்பாட்டினை இவ்வாறு மட்டுப்படுத்துவதன் காரணமாக பன்னாட்டு அபிவிருத்தியமைப்பானது நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு வெளிநாட்டிலுள்ள தங்களது பேராளருக்கு வெளிநாட்டு நாணயத்தின் முழுத் தொகையையும் வழங்காதுவிட்டால் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பில் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்குரிய நிலுவையை தாங்கள் செலுத்தலாம்.

7. இக் கொடுகடனின் கீழ் இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்தின் இணைக்கிணை நிதியக் கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ள கப்பற்படுத்தல் ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினைச் செலுத்த வேண்டியதில்லை. எனவே, அத்தகைய ஆவணங்கள் பெறப்பட்டவுடனேயே உங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய தரகுகள், கட்டணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை அறவிட்ட பின்னர் அத்தகைய ஆவணங்களை உங்களது வாடிக்கையாளர்களுக்கு நீங்கள் விடுவிக்கலாம்.

8. ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றுடன் நாணயக் கடிதங்களின் பிரதிகள் கொழும்பு, இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

9. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தேவைப்பாடுகள் உங்களுக்குத் தனியாக அறிவுறுத்தப்படும்.

உங்களின் உண்மையுள்ள

**வை. எம். இடபிள்யூ. பி. வீரசேகர**

முதன்மைக் கணக்காளர்

பிரதி: 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2. செயற்றிட்டப் பணிப்பாளர்,
சூழல் நடவடிக்கை செயற்றிட்டம்,
வனவள சுற்றாடல் அமைச்சு
104, ஏ, கித்துல்வத்தை வீதி
கொழும்பு 8.

சுற்றறிக்கை எண். 4651

வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
தளம் 8
அ.பெ. 590
சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
2 ஒத்தோபர் 2000

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

## முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியினால்

(அ) அரச மற்றும் அரச உத்தரவாதப் பிணையங்கள், அத்துடன்

(ஆ) வர்த்தக மற்றும் உற்பத்தி கடன்களுடன் தொடர்பான சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்கள்

என்பனவற்றை பிணையாகக் கொண்டு வழங்கப்படும் முற்பணங்கள் மீதான வட்டிவீதம் 2 ஒத்தோபர் 2000 தொடக்கம் ஆண்டொன்றுக்கு பதினெட்டு (18) சதவீதமாக இருக்கும் என உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**வை. எம். இடபிள்யூ. பி. வீரசேகர**
முதன்மைக் கணக்காளர்

**ஏ.எஸ். ஜயவர்த்தன**
ஆளுநர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : 01/02/005/0018/016

வங்கித் தொழில் திணைக்களம்

24 ஒத்தோபர் 2000

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

1995 திசெம்பர் 14ஆம் நாளிடப்பட்டதும் பீடி/ 09/ 95 எண் கொண்டதுமான எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக,

2000ஆம் ஆண்டு மே 20ஆம் நாளன்று டாக்காவில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் 29ஆவது கூட்டத்தில் கையெழுத்தான உடன்படிக்கைகளின் மூலம் பூட்டான் அரச நாணய அதிகாரசபையானது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தில் இணைந்துள்ளது என்பதனை எழுத்துமூலம் உங்களுக்கு அறிவித்துக் கொள்கின்றோம்.. பூட்டானுடனான வர்த்தகம் மற்றும் ஒப்புதலளிக்கத்தக்க மற்றைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளையும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக உடனடியாகவே தீர்ப்பனவுசெய்து கொள்ளுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வை. எம். இடபிள்யூ. பி. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

சுற்றறிக்கை எண். 4664

வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
தளம் 8
அ.பெ. 590
சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
8 நவெம்பர் 2000

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

## முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்

உரிமம் பெற்ற வர்தத‌க வங்கிகளுக்கு மத்திய வங்கியினால்

(அ) அரச மற்றும் அரச உத்தரவாதப் பிணையங்கள், அத்துடன்

(ஆ) வர்த்தக மற்றும் உற்பத்தி கடன்களுடன் தொடர்பான சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்கள்

என்பனவற்றை பிணையாகக் கொண்டு வழங்கப்படும் முற்பணங்கள் மீதான வட்டிவீதம் 8 நவெம்பர் 2000 தொடக்கம் ஆண்டொன்றுக்கு இருபது (20) சதவீதமாக இருக்கும் என உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**வை. எம். இடபிள்யூ. பி. வீரசேகர**
முதன்மைக் கணக்காளர்

**ஏ.எஸ். ஜயவர்த்தன**
ஆளுநர்

சுற்றறிக்கை எண்: 4665

வங்கித் தொழில் திணைக்களம்

15 நவெம்பர் 2000

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினது**

**திறைசேரி முகாமையாளர்களுக்கு**

## வங்கிகளுக்கிடையிலான நாளாந்த வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல் அறிக்கை

30.7.1990 நாளிடப்பட்டதும் எண் பீடி/எவ்எக்ஸ்/எல்ஜபீரி/90 எண் கொண்டதுமான எமது சுற்றறிக்கைக்கு மேலதிகமாக 2000.11.15 நாளிலிருந்து செயற்படும் வகையில் ஒவ்வொரு நாளும் பி.ப.4.00 மணிவரை மேற் கொள்ளப்பட்ட உங்களுடைய அனைத்து வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல் பற்றி அதே நாளன்று பி.4.00 மணிக்குப் பின்னர் உடனடியாக வங்கித் தொழில் திணைக்களத்திற்கு தொலை நகல் எண் 346282/346284இன் மூலம் அறிக்கையளிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பி.ப. 4.00மணிக்குப் பின்னர் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் வழமைபோன்று அதே நாளன்று அறிக்கையிடப்பட வேண்டும்.

இத்தகவலை உரிய நேரத்தில் வழங்குவதில் நீங்கள் காட்டும் ஒத்துழைப்பு மிகவும் வரவேற்கப்படுகிறது.

**வை. எம். இடபிள்யூ. பி. வீரசேகர**

முதன்மைக் கணக்காளர்

சுற்றறிக்கை எண். 4669

வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
தளம் 8
அ.பெ. 590
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
21 நவெம்பர் 2000

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

## முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியினால்

(அ) அரச மற்றும் அரச உத்தரவாதப் பிணையங்கள், அத்துடன்

(ஆ) வர்த்தக மற்றும் உற்பத்தி கடன்களுடன் தொடர்பான சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்கள்

என்பனவற்றை பிணையாகக் கொண்டு வழங்கப்படும் முற்பணங்கள் மீதான வட்டிவீதம் 21 நவெம்பர் 2000 தொடக்கம் ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து (25) சதவீதமாக இருக்கும் என உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வை. எம். இடபிள்யூ. பி. வீரசேகர
முதன்மைக் கணக்காளர்

ஏ.எஸ். ஜயவர்த்தன
ஆளுநர்

## வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள்

( இலங்கை ரூபாய்களில் )

| நடைமுறையான நாள் | சுற்றறிக்கை எண் | அவுத்திரே. டொலர் (டொலர் 1இற்கு) | ஒசுத்திரிய சிலிங் (சிலிங் 10 இற்கு) | பாரெயின் தினார் (தினார் 1இற்கு) | பெல்சியம் பிராங்கு (பிராங்கு 10 இற்கு) | கனடிய டொலர் (டொலர் 1 இற்கு) | தெனிச குறோனர் (குறோனர் 10 இற்கு) | சேர்மன் மார்க்கு (மார்க்கு 1இற்கு) | பின்லாந்து பிராங்கு (பிராங்கு 10 இற்கு) | பிரான்சிய பிராங்கு (பிராங்கு 10 இற்கு) | கொங்கொங் டொலர் (டொலர் 10 இற்கு) | இத்தாலிய லீறா (லீறா 1000 இற்கு) | யப்பானிய யென் (யென் 100 இற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04.01.2000 | 4573 | 45.95 | 51.30 | 184.70 | 17.50 | 48.20 | 94.80 | 36.10 | 115.55 | 107.65 | 89.55 | 36.45 | 68.30 |
| 11.01.2000 | 4575 | 45.80 | 52.20 | 185.20 | 17.80 | 47.95 | 96.45 | 36.70 | 117.55 | 109.50 | 89.75 | 37.10 | 66.55 |
| 18.01.2000 | 4577 | 46.50 | 51.50 | 185.55 | 17.55 | 48.20 | 95.20 | 36.25 | 116.00 | 108.05 | 89.90 | 36.60 | 66.45 |
| 25.01.2000 | 4579 | 46.10 | 51.10 | 185.65 | 17.40 | 48.50 | 94.75 | 35.95 | 115.05 | 107.15 | 89.95 | 36.30 | 66.80 |
| 01.02.2000 | 4581 | 44.75 | 49.95 | 186.15 | 17.05 | 48.60 | 92.30 | 35.15 | 112.50 | 104.80 | 90.20 | 35.50 | 65.65 |
| 08.02.2000 | 4583 | 44.90 | 50.10 | 186.35 | 17.10 | 48.80 | 93.40 | 35.25 | 112.85 | 105.10 | 90.25 | 35.60 | 65.40 |
| 15.02.2000 | 4585 | 44.40 | 50.40 | 18.60 | 17.20 | 48.45 | 93.10 | 35.45 | 113.50 | 105.70 | 90.40 | 35.80 | 64.70 |
| 22.02.2000 | 4587 | 44.25 | 50.45 | 186.85 | 17.20 | 48.55 | 93.20 | 35.50 | 113.60 | 105.80 | 90.50 | 35.85 | 63.65 |
| 29.02.2000 | 4589 | 43.35 | 49.75 | 187.05 | 16.95 | 48.65 | 93.85 | 35.00 | 112.05 | 104.35 | 90.60 | 35.35 | 64.35 |
| 07.03.2000 | 4591 | 42.45 | 49.15 | 187.25 | 16.75 | 48.60 | 91.45 | 34.60 | 110.70 | 103.10 | 90.70 | 34.95 | 65.70 |
| 14.03.2000 | 4593 | 43.20 | 49.40 | 187.15 | 16.85 | 48.40 | 90.45 | 34.75 | 111.25 | 103.65 | 90.65 | 35.10 | 66.55 |
| 20.03.2000 | 4595 | 42.80 | 49.85 | 187.25 | 17.00 | 48.00 | 92.10 | 35.10 | 112.30 | 104.60 | 90.65 | 35.45 | 66.25 |
| 28.03.2000 | 4597 | 43.15 | 50.20 | 187.40 | 17.10 | 48.30 | 92.40 | 35.30 | 113.05 | 105.30 | 90.75 | 35.65 | 66.05 |
| 04.04.2000 | 4599 | 42.90 | 49.00 | 187.45 | 16.70 | 48.80 | 91.00 | 34.45 | 110.35 | 102.80 | 90.75 | 34.80 | 67.35 |
| 11.04.2000 | 4601 | 42.25 | 49.10 | 187.70 | 16.75 | 48.50 | 90.75 | 34.55 | 110.60 | 103.05 | 90.85 | 34.90 | 66.80 |
| 19.04.2000 | 4603 | 42.60 | 49.60 | 187.65 | 16.90 | 47.90 | 90.55 | 34.90 | 111.70 | 104.05 | 90.80 | 35.25 | 67.50 |
| 25.04.2000 | 4605 | 42.00 | 48.30 | 187.95 | 16.45 | 48.10 | 89.10 | 33.95 | 108.70 | 101.30 | 90.95 | 34.30 | 66.85 |
| 02.05.2000 | 4607 | 41.70 | 47.00 | 188.30 | 16.00 | 48.00 | 87.80 | 33.05 | 105.80 | 98.55 | 91.15 | 33.40 | 66.60 |
| 08.05.2000 | 4609 | 42.35 | 46.60 | 188.70 | 15.90 | 47.70 | 86.00 | 32.80 | 104.95 | 97.75 | 91.30 | 33.10 | 65.30 |
| 16.05.2000 | 4611 | 41.45 | 47.50 | 189.10 | 16.20 | 47.95 | 86.30 | 33.45 | 107.00 | 99.65 | 91.50 | 33.75 | 65.60 |
| 23.05.2000 | 4613 | 40.80 | 46.55 | 189.40 | 15.90 | 47.70 | 85.90 | 32.75 | 104.80 | 97.65 | 91.65 | 33.10 | 66.75 |
| 30.05.2000 | 4615 | 41.05 | 48.40 | 189.50 | 16.50 | 47.55 | 87.40 | 34.05 | 108.95 | 101.50 | 91.70 | 34.40 | 66.80 |
| 06.06.2000 | 4617 | 41.45 | 49.20 | 190.05 | 16.75 | 48.45 | 89.40 | 34.60 | 110.75 | 103.15 | 91.95 | 34.95 | 66.35 |
| 13.06.2000 | 4619 | 42.25 | 49.65 | 190.75 | 16.95 | 48.80 | 91.45 | 34.95 | 111.80 | 104.15 | 92.25 | 35.30 | 67.20 |
| 20.06.2000 | 4621 | 45.30 | 52.10 | 198.70 | 17.80 | 51.05 | 97.00 | 36.65 | 117.40 | 109.35 | 96.10 | 37.05 | 70.95 |
| 27.06.2000 | 4623 | 44.50 | 51.00 | 198.70 | 17.40 | 50.50 | 94.10 | 35.85 | 114.80 | 106.95 | 96.15 | 36.25 | 71.60 |
| 04.07.2000 | 4625 | 44.90 | 51.95 | 198.70 | 17.70 | 50.60 | 95.75 | 36.55 | 116.95 | 108.95 | 96.10 | 36.90 | 70.65 |
| 10.07.2000 | 4627 | 44.30 | 51.60 | 198.70 | 17.60 | 50.55 | 95.30 | 36.30 | 116.25 | 108.30 | 96.10 | 36.70 | 69.65 |
| 18.07.2000 | 4629 | 43.70 | 51.05 | 198.70 | 17.40 | 50.45 | 94.20 | 35.90 | 114.90 | 107.05 | 96.05 | 36.25 | 69.35 |
| 25.07.2000 | 4631 | 44.05 | 51.00 | 198.70 | 17.40 | 50.90 | 94.20 | 35.85 | 114.85 | 106.95 | 96.05 | 36.25 | 68.80 |
| 01.08.2000 | 4633 | 43.70 | 50.30 | 198.70 | 17.15 | 50.65 | 93.60 | 35.40 | 113.25 | 105.50 | 96.05 | 35.75 | 68.45 |
| 08.08.2000 | 4635 | 43.95 | 49.45 | 198.70 | 16.85 | 50.30 | 91.25 | 34.80 | 111.35 | 103.70 | 96.05 | 35.15 | 68.95 |
| 15.08.2000 | 4637 | 43.65 | 49.35 | 198.70 | 16.85 | 50.45 | 91.05 | 34.70 | 111.10 | 103.50 | 96.05 | 35.05 | 68.45 |
| 22.08.200 | 4639 | 44.25 | 49.40 | 198.70 | 16.85 | 50.75 | 92.00 | 34.75 | 111.20 | 103.60 | 96.05 | 35.10 | 69.15 |
| 29.08.2000 | 4641 | 42.95 | 49.15 | 198.70 | 16.75 | 50.45 | 90.65 | 34.55 | 110.65 | 103.05 | 96.05 | 34.90 | 70.25 |
| 05.09.2000 | 4642 | 43.30 | 49.05 | 198.70 | 16.70 | 50.85 | 90.45 | 34.50 | 110.40 | 102.85 | 96.05 | 34.85 | 70.70 |
| 12.09.2000 | 4645 | 41.80 | 47.15 | 198.70 | 16.10 | 50.70 | 89.15 | 33.20 | 106.20 | 98.90 | 96.05 | 33.50 | 70.60 |
| 19.09.2000 | 4647 | 40.75 | 46.50 | 198.70 | 15.85 | 50.50 | 85.65 | 32.70 | 104.65 | 97.50 | 96.05 | 33.05 | 69.90 |
| 26.09.2000 | 4649 | 41.00 | 47.95 | 202.40 | 16.35 | 50.35 | 86.35 | 33.75 | 107.95 | 100.55 | 96.05 | 34.05 | 69.35 |
| 03.10.2000 | 4652 | 40.70 | 48.05 | 203.55 | 16.40 | 49.80 | 88.65 | 33.80 | 108.25 | 100.85 | 96.05 | 34.15 | 69.20 |
| 10.10.2000 | 4654 | 40.00 | 47.35 | 203.55 | 16.15 | 49.80 | 87.35 | 33.30 | 106.60 | 99.30 | 96.10 | 33.65 | 68.70 |
| 17.10.2000 | 4656 | 39.45 | 46.55 | 203.55 | 15.90 | 49.70 | 86.75 | 32.75 | 104.85 | 97.65 | 96.05 | 33.10 | 69.55 |
| 24.10.2000 | 4658 | 39.60 | 45.75 | 203.55 | 15.60 | 49.55 | 85.20 | 32.20 | 103.00 | 95.95 | 96.05 | 32.50 | 68.75 |
| 31.10.2000 | 4660 | 39.00 | 45.70 | 203.55 | 15.60 | 49.00 | 83.50 | 32.15 | 102.90 | 95.85 | 96.05 | 32.45 | 68.90 |
| 07.11.2000 | 4662 | 39.55 | 47.20 | 199.25 | 16.10 | 49.05 | 87.25 | 33.20 | 106.35 | 99.05 | 96.35 | 33.55 | 70.15 |
| 14.11.2000 | 4666 | 39.30 | 47.30 | 200.10 | 16.15 | 48.90 | 87.30 | 33.30 | 106.60 | 99.25 | 96.75 | 33.65 | 69.90 |
| 21.11.2000 | 4668 | 39.40 | 46.85 | 201.35 | 16.00 | 48.75 | 86.75 | 32.95 | 105.50 | 98.25 | 97.30 | 33.30 | 69.70 |
| 28.11.2000 | 4671 | 39.80 | 46.70 | 202.80 | 15.95 | 49.65 | 86.15 | 32.85 | 105.15 | 97.95 | 98.00 | 33.20 | 68.70 |
| 04.12.2000 | 4673 | 41.05 | 46.60 | 202.50 | 15.90 | 49.35 | 89.70 | 32.80 | 105.00 | 97.80 | 97.85 | 33.15 | 68.85 |
| 12.12.2000 | 4675 | 42.10 | 49.60 | 204.85 | 16.90 | 50.85 | 91.55 | 34.90 | 111.65 | 104.00 | 99.05 | 35.25 | 69.65 |
| 19.12.2000 | 4677 | 41.95 | 50.25 | 204.90 | 17.15 | 50.75 | 92.75 | 35.35 | 113.20 | 105.45 | 99.05 | 35.70 | 68.60 |
| 26.12.2000 | 4679 | 42.85 | 51.40 | 204.95 | 17.55 | 50.80 | 94.10 | 36.15 | 115.70 | 107.80 | 99.05 | 36.50 | 68.75 |

| நடைமுறையான நாள் | குவைத் தினார் (தினார் 1 இற்கு) | நெதர்லாந்து கில்டர் (கில்டர் 1இற்கு) | நோர்வே குறோனர் (குறோனர் 10 இற்கு) | ஓமானிய ரியால் (ரியால் 1 இற்கு) | சவூதி அரேபிய ரியால் (ரியால் 1 இற்கு) | சிங்கப்பூர் டொலர் (டொலர் 1இற்கு) | சுவீடன் குறோனர் (குறோனர் 10 இற்கு) | சுவிட்சர்லா. பிராங்கு (பிராங்கு 1 இற்கு ) | ஐ.அரபிய எமிரேற்ஸ் திராம்(திராம் 10இற்கு) | ஐ. இராச்சிய பவுண் (பவுண் 1 இற்கு) | ஐ.அமெரிக்க டொலர் (டொலர். 1 இற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04.01.2000 | 222.70 | 32.05 | 87.35 | 176.10 | 18.55 | 41.90 | 82.35 | 43.95 | 18.95 | 112.75 | 70.30 |
| 11.01.2000 | 223.30 | 32.60 | 87.55 | 176.60 | 18.60 | 42.10 | 82.95 | 44.65 | 19.00 | 114.45 | 70.45 |
| 18.01.2000 | 223.70 | 32.15 | 87.80 | 176.90 | 18.65 | 41.85 | 82.60 | 43.90 | 19.05 | 114.40 | 70.60 |
| 25.01.2000 | 223.80 | 31.90 | 87.05 | 177.00 | 18.65 | 41.55 | 81.90 | 43.60 | 19.05 | 115.30 | 70.65 |
| 01.02.2000 | 224.45 | 31.20 | 85.00 | 177.45 | 18.70 | 41.10 | 79.60 | 42.70 | 19.10 | 113.85 | 70.80 |
| 08.02.2000 | 223.25 | 31.30 | 85.65 | 177.65 | 18.75 | 41.40 | 82.00 | 42.90 | 19.15 | 111.80 | 70.90 |
| 15.02.2000 | 223.50 | 31.45 | 86.10 | 177.85 | 18.75 | 41.55 | 82.00 | 43.20 | 19.15 | 112.05 | 71.00 |
| 22.02.2000 | 224.00 | 31.50 | 85.25 | 178.15 | 18.80 | 41.30 | 81.30 | 43.30 | 19.20 | 112.65 | 71.10 |
| 29.02.2000 | 224.50 | 31.05 | 85.40 | 178.35 | 18.80 | 41.30 | 81.45 | 42.55 | 19.20 | 112.10 | 71.15 |
| 07.03.2000 | 223.90 | 30.70 | 84.40 | 178.50 | 18.80 | 40.95 | 80.25 | 42.10 | 19.25 | 111.65 | 71.25 |
| 14.03.2000 | 223.80 | 30.85 | 84.15 | 178.40 | 18.80 | 41.40 | 80.90 | 42.25 | 19.20 | 111.25 | 71.20 |
| 20.03.2000 | 223.90 | 31.15 | 84.30 | 178.50 | 18.80 | 41.10 | 81.60 | 42.60 | 19.25 | 111.05 | 71.25 |
| 28.03.2000 | 224.10 | 31.35 | 84.60 | 178.65 | 18.85 | 41.15 | 81.95 | 43.45 | 19.25 | 112.50 | 71.30 |
| 04.04.2000 | 224.85 | 30.60 | 83.95 | 178.70 | 18.85 | 41.25 | 81.70 | 42.35 | 19.25 | 112.45 | 71.30 |
| 11.04.2000 | 225.15 | 30.65 | 83.25 | 178.95 | 18.85 | 41.20 | 81.65 | 43.05 | 19.25 | 111.75 | 71.40 |
| 19.04.2000 | 225.05 | 30.95 | 82.85 | 178.90 | 18.85 | 41.40 | 81.95 | 43.50 | 19.25 | 112.35 | 71.40 |
| 25.04.2000 | 225.45 | 30.15 | 81.60 | 179.20 | 18.90 | 41.70 | 80.60 | 42.25 | 19.30 | 111.65 | 71.50 |
| 02.05.2000 | 224.85 | 29.35 | 80.40 | 179.50 | 18.95 | 41.65 | 79.85 | 41.10 | 19.35 | 111.70 | 71.65 |
| 08.05.2000 | 224.90 | 29.10 | 78.70 | 179.90 | 18.95 | 41.25 | 78.50 | 41.30 | 19.40 | 108.90 | 71.80 |
| 16.05.2000 | 225.10 | 29.65 | 78.30 | 180.30 | 19.00 | 41.25 | 77.85 | 42.05 | 19.40 | 108.20 | 71.95 |
| 23.05.2000 | 225.45 | 29.05 | 78.40 | 180.60 | 19.05 | 41.40 | 78.00 | 41.25 | 19.45 | 106.00 | 72.05 |
| 30.05.2000 | 225.80 | 30.20 | 78.90 | 180.70 | 19.05 | 41.25 | 78.25 | 42.50 | 19.45 | 106.50 | 72.10 |
| 06.06.2000 | 227.15 | 30.70 | 80.30 | 181.20 | 19.10 | 41.65 | 80.10 | 42.95 | 19.50 | 108.25 | 72.30 |
| 13.06.2000 | 228.65 | 31.00 | 82.20 | 181.85 | 19.15 | 41.70 | 82.10 | 43.65 | 19.60 | 108.25 | 72.55 |
| 20.06.2000 | 238.25 | 32.55 | 87.35 | 189.45 | 19.95 | 43.20 | 86.65 | 46.00 | 20.40 | 113.20 | 75.60 |
| 27.06.2000 | 238.25 | 31.85 | 85.85 | 189.45 | 19.95 | 43.25 | 84.65 | 45.25 | 20.40 | 112.50 | 75.60 |
| 04.07.2000 | 237.90 | 32.45 | 87.30 | 189.45 | 19.95 | 43.30 | 85.05 | 45.85 | 20.40 | 113.70 | 75.60 |
| 10.07.2000 | 238.10 | 32.25 | 87.25 | 189.45 | 19.95 | 43.15 | 84.10 | 46.05 | 20.40 | 113.40 | 75.60 |
| 18.07.2000 | 237.50 | 31.85 | 86.15 | 189.45 | 19.95 | 42.90 | 84.25 | 45.35 | 20.40 | 112.25 | 75.60 |
| 25.07.2000 | 237.15 | 31.85 | 85.65 | 189.45 | 19.95 | 42.85 | 83.45 | 45.15 | 20.40 | 113.75 | 75.60 |
| 01.08.2000 | 237.15 | 31.40 | 85.00 | 189.45 | 19.95 | 43.25 | 82.25 | 44.70 | 20.40 | 112.60 | 75.60 |
| 08.08.2000 | 237.05 | 30.85 | 84.15 | 189.35 | 19.95 | 43.45 | 82.80 | 43.90 | 20.40 | 112.60 | 75.60 |
| 15.08.2000 | 236.70 | 30.80 | 84.20 | 189.35 | 19.95 | 43.60 | 81.60 | 43.60 | 20.40 | 112.75 | 75.60 |
| 22.08.200 | 236.70 | 30.85 | 84.95 | 189.35 | 19.95 | 43.60 | 81.45 | 43.55 | 20.40 | 111.65 | 75.60 |
| 29.08.2000 | 236.55 | 30.70 | 83.60 | 189.35 | 19.95 | 43.60 | 80.50 | 43.80 | 20.40 | 110.20 | 75.60 |
| 05.09.2000 | 236.90 | 30.60 | 83.40 | 189.35 | 19.95 | 43.50 | 80.50 | 43.45 | 20.40 | 109.60 | 75.60 |
| 12.09.2000 | 236.90 | 29.45 | 82.50 | 189.35 | 19.95 | 43.15 | 79.10 | 41.95 | 20.40 | 106.05 | 75.60 |
| 19.09.2000 | 236.15 | 29.00 | 79.85 | 189.35 | 19.95 | 42.90 | 76.25 | 42.00 | 20.40 | 104.75 | 75.60 |
| 26.09.2000 | 236.15 | 29.95 | 80.40 | 189.35 | 19.95 | 42.90 | 76.55 | 43.35 | 20.40 | 109.20 | 75.60 |
| 03.10.2000 | 237.40 | 30.00 | 82.60 | 189.35 | 19.95 | 43.05 | 77.55 | 43.40 | 20.40 | 110.45 | 75.60 |
| 10.10.2000 | 237.55 | 29.55 | 81.10 | 189.35 | 19.95 | 42.80 | 76.15 | 42.85 | 20.40 | 108.45 | 75.60 |
| 17.10.2000 | 237.55 | 29.05 | 80.45 | 189.35 | 19.95 | 42.75 | 75.30 | 42.40 | 20.40 | 108.85 | 75.60 |
| 24.10.2000 | 236.50 | 28.55 | 79.20 | 189.35 | 19.95 | 42.65 | 74.75 | 41.90 | 20.40 | 109.00 | 75.60 |
| 31.10.2000 | 236.00 | 28.55 | 78.35 | 189.35 | 19.95 | 42.70 | 72.70 | 41.50 | 20.40 | 108.95 | 75.60 |
| 07.11.2000 | 237.35 | 29.50 | 81.65 | 189.90 | 20.05 | 43.45 | 76.05 | 42.70 | 20.45 | 108.75 | 75.85 |
| 14.11.2000 | 238.40 | 29.55 | 81.50 | 190.70 | 20.10 | 43.25 | 75.70 | 42.75 | 20.55 | 107.80 | 76.15 |
| 21.11.2000 | 239.85 | 29.25 | 80.95 | 191.85 | 20.25 | 43.35 | 74.85 | 42.25 | 20.65 | 108.05 | 76.60 |
| 28.11.2000 | 241.35 | 29.15 | 80.20 | 193.25 | 20.40 | 43.40 | 74.00 | 42.45 | 20.80 | 107.25 | 77.15 |
| 04.12.2000 | 241.00 | 29.10 | 82.70 | 192.95 | 20.35 | 43.70 | 76.25 | 44.25 | 20.80 | 109.95 | 77.05 |
| 12.12.2000 | 244.80 | 30.95 | 84.40 | 195.20 | 20.60 | 44.45 | 79.40 | 45.20 | 21.05 | 111.60 | 77.95 |
| 19.12.2000 | 245.20 | 31.40 | 85.35 | 195.25 | 20.60 | 44.50 | 80.25 | 45.95 | 21.05 | 114.10 | 77.95 |
| 26.12.2000 | 245.25 | 32.10 | 86.05 | 195.30 | 20.60 | 44.55 | 80.70 | 46.45 | 21.05 | 113.90 | 78.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

# 1988இன் 30ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டம்

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டத்தின் பிரிவு 19(4) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற் கொள்ளப்பட்ட தீர்மானம்.

ஏ.எஸ். ஜயவர்த்தன

ஆளுநர்

29 பெப்புருவரி 2000

## தீர்மானம்

1. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19 (4) இனால் உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தும் நாணயச்சபையானது, 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 14ஆம் நாள் தொடக்கம் இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் மூலதனத்தில் வெளிநாட்டின் பங்கேற்பு அதன் மொத்த பங்கு மூலதனத்தில் 60 சதவீதத்தினை விஞ்சக்கூடாது என இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

2. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 14ஆம் நாளுக்கு உடன்முன்னர் நடைமுறையிலிருந்த தீர்மானத்தின் வலுப்படுத்தல் அந்நாளிலிருந்து முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

## 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டம்

## 2000ஆம் ஆண்டின் வங்கித் தொழில் (கரைகடந்த வங்கித் தொழில் முறை) கட்டளை

வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவுகள் 23, 25 மற்றும் 26இனால் உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தி நாணயச் சபையானது அமைச்சரின் ஒப்புதலுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற் கொள்ளப்பட்ட கரைகடந்த வங்கித் தொழில் வாணிபத்துடன் தொடர்பான கட்டளையை மேற்கொண்டது.

ஏ.எஸ். ஜயவர்த்தன

ஆளுநர்

கொழும்பு, 7 ஏப்பிறல் 2000

## 2000ஆம் ஆண்டின் வங்கித் தொழில் (கரைகடந்த வங்கித் தொழில் முறை ) கட்டளை

மேள்கோள் வாசகம்

1. இக்கட்டளையானது வங்கித் தொழில் (கரை கடந்த வங்கித் தொழிற் முறை) கட்டளை என எடுத்துக் காட்டப்படலாம்.

அங்கீகரிக்கப்பட்ட வாணிபம்

2 (1) கரைகடந்த பிரிவொன்று, இக்கட்டளைக்கும் அத்துடன் மற்றைய எந்த ஒரு எழுதப்பட்ட சட்டத்திற்கும் அமைவாக, சட்டத்தின் பிரிவு 25இன் (அ) இலிருந்து (உ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து அல்லது எந்த ஒரு வியாபாரத்தையும் மேற்கொள்ளலாம்.

(2) சட்டத்தின் பிரிவு 25 (இ) இன் கீழ் எந்தவொரு எதிர்பாரா அவசரப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்கையில் கரைகடந்த பிரிவொன்று பின்வரும் எந்த ஒரு அல்லது அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடலாம்.

(அ) குறித்துரைக்கப்படட எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும் நாணயகக் கடிதங்களை நிறுவலாம், திறக்கலாம் அல்லது அறிவுறுத்தல் வழங்கலாம்.

(ஆ) எந்த ஒரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் உத்தரவாதங்களை வழங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம், இழப்பீடுகள் அல்லது அதையொத்தவற்றை மேற்கொள்ளலாம்..

(இ) எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் ஏற்பனவுகளைச் செய்யலாம்.

நிதியங்களை மீளப் பெறல்

3. கரைகடந்த பிரிவொன்றில் பேணப்படுகின்ற கணக்கொன்றிலுள்ள நிதியினை காசோலை மூலம் மீளப்பெறமுடியாது.

வதிவுடையோருடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிபம்

4. (1) கரைகடந்த பிரிவொன்று, இக் கட்டளைக்கும் அத்துடன் எழுதப்பட்ட எந்த ஒரு சட்டத்திற்கும் உட்பட்டு பந்தி 2இல் குறித்துரைக்கப்பட்ட கரைகடந்த வங்கித் தொழில் வாணிபங்களை பின்வரும் வதிவோர்களில் ஒருவருடனோ அல்லது கூடுதலானவர்களுடனோ மேற்கொள்ளலாம்.

(அ) இலங்கை மத்திய வங்கி

(ஆ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று

(இ) துணைப்பந்தி (3) இற்கு உட்பட்டு முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சியொன்று

(ஈ) நாணயச்சபையினால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு தேசிய பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட எந்தவொரு வதிவோரும்.

(2) துணைப் பந்தி (1)இல் குறித்துரைக்கப்பட்ட வதிவோர் தொடர்பாக இக் கட்டளையின் கீழ் உரித்தாக்கப்பட்ட உரிமைகளுக்கு ஊறுவிளைவிக்காமல், கரைகடந்த பிரிவொன்று, எழுதப்பட்ட எந்தவொரு சட்டத்திற்கும் உட்பட்டு நணயச்சபையினால் ஒப்புதல் வழங்கப்படுகின்றவாறு இலங்கையிலிருந்து பொருட்களையும் பணிகளையும் ஏற்றுமதி செய்கின்ற எந்தவொரு வதிவுடையோருக்கும் அல்லது அத்தகைய ஏற்றுமதியாளர்களுக்கு துணைப் பொருட்களை வழங்குகின்ற எந்த ஒரு வதிவுடையோருமாகிய அத்தகைய ஏற்றுமதியாளருக்கு எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும கடன்களை வழங்கவும், எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் ஏற்றுமதி உண்டியல்களைக் கழிவிடவும் முடியும்.

(3) கடனை வெளிநாட்டு நாணயத்தில் மீளச் செலுத்த முதலீட்டுச் சபைத்தொழில் முயற்சிகள் இயலாற்றலுடையன என கரை கடந்த பிரிவுகள் திருப்திப்பட்டாலொழிய முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளுக்கு கரைகடந்த பிரிவுகள் வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்கல் கூடாது.

| | |
|---|---|
| வதிவற்ற கணக்கொன்றில் அனுமதிக்கப்பட்ட வைப்புக்கள் | 5. வதிவற்ற ஒருவரினால் கரைகடந்த பிரிவொன்றில் பேணப்படும் கணக்கொன்றில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் பெற்ற உள்வரும் பணவனுப்பல்கள் மட்டுமே வரவு வைக்கப்படும். |
| கரை கடந்த பிரிவொன்றின் சொத்துக்களும் பொறுப்புக்களும் | 6. கரைகடந்த பிரிவொன்றின் மொத்தச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நாணயச்சபையினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய தொகைகளை விஞ்சக்கூடாது. |
| நிறைவேற்று அலுவலர்களின் விபரங்களும் மேற்கொள்ளும் விடயங்களும் | 7. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று – |

(அ) கரைகடந்த வங்கித் தொழில் வாணிபத்தினை தொடங்குவதற்கு முன்னர், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு வங்கியின் கரைகடந்த பிரிவின் அனைத்து நிறைவேற்று அலுவலர்களினதும் பெயர்கள், தகைமைகள் மற்றும் வங்கித் தொழில் அனுபவங்கள் என்பனவற்றை வழங்க வேண்டியதுடன் அதன் பின்னர் அத்தகைய விபரங்கள் தொடர்பாக மாற்றங்கள் ஏதும் இருப்பின் அவற்றை உடனடியாக அறிவிக்க வேண்டும் ; அத்துடன்

(ஆ) இலங்கைக்கு வெளியே ஒருங்கிணைக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றைப் பொறுத்தவரை, நாணயச்சபையினால் கேட்டுக் கொள்ளப்படுமிடத்து, இதன் கரைகடந்த வங்கித் தொழில் வாணிபத்தினைக் கொண்டு நடத்துகையில் உறப்படும் அனைத்துக் கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் ஈடு செய்வதற்கு அவசியமாக தேவைப்படக்கூடிய அத்தகைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய நிதியினை அத்தகைய வங்கியானது வழங்கும் எனத்தெரிவிக்கின்ற எழுத்து மூலமான உறுதி மொழியொன்றினை அதன் தலைமை அலுவலகம் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு வழங்கவேண்டும்.

| | |
|---|---|
| கரை கடந்த பிரிவின் ஏடுகள் போன்றவை | 8. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த பிரிவொன்றினால் பேணப்படும் ஏடுகள், மற்றைய ஆவணங்கள் மற்றும் பதிவுகள் என்பன வங்கியினால் பேணப்படும் மற்றைய ஏடுகள், ஆவணங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்தும் வேறாக வைத்திருக்கப்பட வேண்டியதுடன் நாணயச்சபையினால் கேட்டுக் கொள்ளப்படுமிடத்து கரைகடந்த பிரிவானது, கரைகடந்த பிரிவினால் பேணப்பட்ட அத்தகைய ஏடுகள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளிலிருந்தான தகவல்களை மத்திய வங்கிக்கு வழங்கும். |

கருத்த விளக்கம் 9. இக் கட்டளையில்

" முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சி என்பதன் கருத்து, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் இலங்கை முதலீட்டுச்சபையுடன் உடன்படிக்கையொன்றை மேற்கொண்டு எந்தவொரு கரைகடந்த பிரிவொன்றுடனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ள கம்பனியொன்று எனப் பொருள்படும்.

"குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பதன் கருத்து யாதெனில் இக்கட்டளைக்கான அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் வெளிநாட்டு நாணயம் என்பதாகும்.

"கரைகடந்த பிரிவு" என்பதன் கருத்து யாதெனில் இச் சட்டத்தின் கீழ் வங்கியின் கரைகடந்த வங்கித்தொழில் வாணிபத்தினை மேற்கொள்ளுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த பிரிவு எனப் பொருள்படுவதுடன் நாணயச் சபையினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் முறையின் கீழ் கரைகடந்த வங்கித் தொழில் தொழிற்பாடுகளின் எந்தவொரு பிரிவினையும் உள்ளடக்கும்.

"வதிவுடையோர்" மற்றும் "வதிவற்றோர்" என்பன 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டத்தின் பிரிவு 86இல் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே கருத்துக்களையே கொண்டிருக்கும்.

அட்டவணை

## குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

1. அவுத்திரேலிய டொலர்
2. கனடிய டொலர்
3. டென்மார்க் குறோனர்
4. டியூச் மார்க்
5. யூரோ
6. பிரான்சிய பிராங்கு
7. கொங்கொங் டொலர்
8. யப்பானிய யென்
9. நெதர்லாந்து கில்டர்
10. நோர்வே குறோனர்
11. இசுடேர்லிங் பவுண்
12. சிங்கப்பூர் டொலர்
13. சுவீடன் குறோனர்
14. சுவிஸ் பிராங்
15. ஐ.அ.டொலர்

# 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

## அறிவித்தல்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் வெளியிடப்பட்ட 22.08.1997 நாளிடப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பான அறிவித்தலுக்கான திருத்தமானது 1995ஆம்ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் பிரிவு 19 (2) மற்றும் 19 (7) என்பனவற்றின் கீழ் 27.12.1999 அன்று திருத்தப்பட்டு 01.01.2001 அன்று நடைமுறைக்குவரும்.

1. மேலே குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பந்தி 2 இனை நீக்கி அதனிடத்தில் பின்வருவதனை பந்தி 2 எனப் பதிலீடு செய்வதன் மூலம்.

   " 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19 (7) இன் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள அறிவித்தலுக்கிணங்க 2001 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் 2001 திசெம்பர் 31ஆம் நாள் முடிவடைகின்றதான காலப்பகுதியில் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் கணிக்கப்பட்ட 4 1/2 சதவீதத்திற்குக் குறையாத உட்கரு மூலதனத்துடன் அதனது இடநேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அனைத்து வேளைகளிலும் ஆகக் குறைந்தது 9 சதவீதமான மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணும்படியும் 2002 சனவரி 01ஆம் நாள் தொடங்குகின்ற காலப்பகுதியிலும் அதன் பின்னரும் கணிக்கப்பட்ட 5 சதவீதத்திற்குக் குறையாத உட்கரு மூலதனத்துடன் அதனது இடர்நேர்வு நியையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அனைத்து வேளைகளிலும் ஆகக் குறைந்தது 10 சதவீதமான மூலதனப் போதுமை சதவீதத்தினைப் பேணும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2. இந்த அறிவித்தலில் பந்தி 1இல் குறிப்பிடப்பட்டதும் மூலதனப் போதுமைக்கான ஆகக் குறைந்த சதவீதம் 8 சதவீதம் எனவும் கரு மூலதனம் 4 சதவீதம் எனவும் குறிப்பிட்டு 22.08.1997ஆம் நாளிடப்பட்ட அட்டவணை 1இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயமும்

   (அ) 01.01.2001 தொடக்கம் 31.12.2001 இல் முடிவடையும் காலப்பகுதிக்கு முறையே 9 சதவீதமாகவும் 4 1/2 சதவீதமாகவும் வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்பட்டது.

   (ஆ) 01.01.2002இல் தொடங்கும் காலப்பகுதிக்கும் அதன் பின்னரும் முறையே 10 சதவீதமெனவும் 5 சதவீதம் எனவும் வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படும்.

3. மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுதல் தொடர்பாக **27.12.1999**இல் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் புறக்கீடு செய்யப்படுகின்றது.

கொழும்பு

29.11.2000

**ஏ.எஸ். ஜயவர்த்தன**

ஆளுநர்

# 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

## பணிப்புரை

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் வெளியிடப்பட்ட 21.11.1997 நாளிடப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பான பணிப்புரைக்கான திருத்தமானது 1995ஆம்ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் பிரிவு 19 (2) மற்றும் 76(ஒ) (1) இன் கீழ் 27.12.1999 அன்று திருத்தப்பட்டு 01.01.2001 அன்று நடைமுறைக்குவரும்.

1. மேலே குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பந்தி 1 இனை நீக்கி அதனிடத்தில் பின்வருவதனை பந்தி 1 எனப் பதிலீடு செய்வதன் மூலம்.

   " 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76 (ஒ) (i) இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையின் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கிணங்க 2001 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் 2001 திசெம்பர் 31ஆம் நாள் முடிவடைகின்றதான காலப்பகுதியில் அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளும் கணிக்கப்பட்ட 4 1/2 சதவீதத்திற்குக் குறையாத உட்கரு மூலதனத்துடன் அதனது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அனைத்து வேளைகளிலும் ஆகக் குறைந்தது 9 சதவீதமான மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேண வேண்டியதுடன் 2002 சனவரி 01ஆம் நாள் தொடங்குகின்ற காலப்பகுதியிலும் அதன் பின்னரும் கணிக்கப்பட்ட 5 சதவீதத்திற்குக் குறையாத உட்கரு மூலதனத்துடன் அதனது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அனைத்து வேளைகளிலும் ஆகக் குறைந்தது 10 சதவீதமான மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுதல் வேண்டும்.

2. இந்த பணிப்புரையில் பந்தி 1இல் குறிப்பிடப்பட்டதும் மூலதனப் போதுமைக்கான ஆகக் குறைந்த சதவீதம் 8 சதவீதம் எனவும் கரு மூலதனம் 4 சதவீதம் எனவும் குறிப்பிட்டு 21.11.1997ஆம் நாளிடப்பட்ட அட்டவணை 1இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயமும்

   (அ) 01.01.2001 தொடக்கம் 31.12.2001 இல் முடிவடையும் காலப்பகுதிக்கு முறையே 9 சதவீதமாகவும் 4 1/2 சதவீதமாகவும் வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படல் வேண்டும்.

   (ஆ) 01.01.2002இல் தொடங்கும் காலப்பகுதிக்கும் அதன் பின்னரும் முறையே 10 சதவீதமெனவும் 5 சதவீதம் எனவும் வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படல் வேண்டும்.

3. மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுதல் தொடர்பாக **27.12.1999**இல் வழங்கப்பட்ட பணிப்புரை இத்தால் புறக்கீடு செய்யப்படுகின்றது.

கொழும்பு — ஏ.எஸ். ஜயவர்த்தன

29.11.2000 — ஆளுநர்

தொடர்பு எண். ஈசி/ 01/ 2000 (எம்யூ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.எண் 883
கொழும்பு.1
2000.01.11

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டுச் செலாவணி விற்பனையும் கொள்வனவும்**
**படிவம் 1 இனையும் படிவம் 2 இனையும் சமர்ப்பித்தல்**

1999 திசெம்பர் 17ஆம் நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண். ஈசி/ 10/ 99 (எம்யூ) இற்கு மேலதிகமாக .

வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் ஐ.அ.டொலர்கள் 5000 இனை அல்லது எந்த ஒரு வெளிநாட்டு நாணயமும் அதற்குச் சமமான தொகைய விஞ்சுமிடத்தில் மாத்திரம் விண்ணப்பதாரிகளின் வருமானவரிக் கோவை எண்ணினை குறிப்பிட வேண்டுமென இத்தால் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அறிவிக்கப்படுகின்றார்கள்.

உங்கள் உண்மையுள்ள
**எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி**
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு எண். ஈசி/ 02/ 2000 (டீ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு.1
2000.02.03

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

**பன்னாட்டு மின்னியல் கடன், பற்று அல்லது மற்றைய எந்தவொரு நிதி மாற்றல் அட்டைகளுக்கும் எதிரான வெளிநாட்டுச் செலாவணி எடுப்பனவினைக் கண்காணிக்கும் திட்டம்**

1999 திசெம்பர் 17ஆம் நாளிடப்பட்ட எண் ஈசி/09/99 (டீ) கொண்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கும் அதன்பின்னர் இவ்விடயம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கும் மேலதிகமாக தமது கணனி நிகழ்ச்சித் திட்டத்தினை மாற்றிக் கொள்ள உள்ள அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் சுற்றறிக்கையின் விடயம் 4இலுள்ள அறிக்கையிடும் தேவைப்பாட்டினை 2000ஆம் ஆண்டு யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம் என இத்தால் அறிவிக்கப்படுகின்றார்கள். அதுவரையில், உடன்பட்டவாறு, தனித்தனியான ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களினதும் பெறுமதி ஐ.அ.டொலர்கள் 3,000 இனை அல்லது அதற்குச் சமமான எந்தவொரு வெளிநாட்டு நாணயத்தையும் விஞ்சுமிடத்து ஒவ்வொரு மின்னியல் நிதிய மாற்றல்களும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவிற்கு அறிவிக்கப்பட வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

2. அத்துடன் உடன்பட்டவாறு, கம்பனி அல்லது நிறுவனமொன்றின் பணிப்பாளர்/பிரதிநிதி/ஊழியர் ஒருவருக்கு மின்னியல் நிதி மாற்றல் அட்டை வழங்கப்படவுள்ளமையைப் பொறுத்தவரை, கம்பனி அல்லது நிறுவனத்தின் கணக்கிலிருந்து செலவுகள் கழிக்கப்படுமிடத்து கம்பனியின் அல்லது நிறுவனத்தின் வருமானவரிக் கோவையின் எண் படிவம் 3இல் எடுத்துக் காட்டப்பட வேண்டும். மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகளுக்கான விண்ணப்பத்தாரிகள் வருமானவரி செலுத்துவோராக இல்லாதவிடத்து அவன்/ அவள் விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் அது தொடர்பான குறிப்பினை எழுதமுடியும்.

3. மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீது உறப்படுகின்ற செலவுகள் அத்தகைய கணக்குகளில் மட்டுமே பற்று வைக்கப்படுமானால் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் தேசிய அல்லா வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கணக்குகள் என்பனவற்றை அவர்களது வதிவிட அந்தஸ்து எதனையும் கருத்திற்கொள்ளாது அவ்வட்டைகளை வழங்கமுடியும்.

4. நாட்டை விட்டுச் செல்லும்போது அட்டைகளைக் கையளிக்க வேண்டும் என்ற தேவைப்பாடு வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இந் நாட்டினர் அல்லா நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு , வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கணக்குகள் என்பனவற்றை வைத்திருப்போருக்குப் பொருந்தாது. இதற்குப் பதிலாக இலங்கையிலிருந்து அவர்கள் புறப்படுவதற்கு முன்னர், அவர்கள் மின்னியல் நிதிய மாற்றல் அட்டையினை வழங்கிய வங்கிக்கு அவர்கள் எந்நாளிலிருந்து வெளிநாட்டிலிருக்கப் போகிறார்களென்பதனையும் அறிவிக்க வேண்டும். அதன்பின்னர் ஏதாவது செலவினம் அவர்களினால் உறப்படுமிடத்து அது வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் வெளிநாட்டவர் நாணயக் கணக்கு வதியும் இந்

நாட்டவர் அல்லா நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுக் கணக்குகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

5. மேற் குறிப்பிட்ட கணக்குகளிலுள்ள வெளிநாட்டு நாணய நிதியங்கள் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் எனது அனுமதியின்றி அட்டை வைத்திருப்போரின் ரூபாக் கணக்குகளிலிருந்து பற்று வைக்கக் கூடாது. மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகள் வைத்திருக்கும் அனைவரும் இதனை நிச்சயம் அறிந்திருத்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

படி: துணை ஆளுநர்கள்

நிறைவேற்றுப்பணிப்பாளர்கள்

ஆளுநரின் உதவியாளர்கள்

ஆலோசகர்கள்

ஆளுநரின் செயலாளர்

தொடர்பு எண். ஈசி/ 003 / 2000 (ஜீ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு.1
2000.04.05

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

**சரக்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதும் வான்வழிப் பட்டியல்கள்/ பொருட்களை கப்பலேற்றுவதற்கான பட்டியல்கள்/ வெளிநாடுகளுக்கு சரக்குகளை கப்பலேற்றுபவர்களின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களை வழங்குதலும்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 12.07.1991 நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/ 48/ 91 (ஜீ) மற்றும் 1997 மாச்சு 4ஆம் நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/ 04/ 97 (ஜீ) என்பனவற்றிற்கு மேலதிகமாக, தற்பொழுது மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள பின்வரும் சரக்கு அனுப்புபவர்களை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள சரக்கு அனுப்புபவர்கள் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பான பேரப் பேச்சுகளுக்கு அவர்களினால் வழங்கப்பட்ட வான் வழிப்பட்டியல்கள்/பொருட்களை கப்பலேற்றியதற்கான பட்டியல்கள்/சரக்குகளைக் கப்பலேற்றுபவர்களின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளுமாறும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

| | சரக்குகளைக் கப்பலேற்றுபவர்களின் பெயர் | பதிவு எண் |
|---|---|---|
| 1. | வரையறுக்கப்பட்ட டீஆர்எச் லொஜிஸ்டிக் லங்கா (பிறைவேட்) | 06/ 07/ 009/ 0089 |
| 2. | வரையறுக்கப்பட்ட டபிள்யூஎஸ்ஏ லைன்ஸ் லங்கா (பிறைவேட்) | 06/ 07/ 009/ 0090 |

உங்கள் உண்மையுள்ள

எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**தொழிற்பாட்டு அறிவிறுத்தல்கள்**

தொடர்பு எண். ஈசி/ 04/ 2000 (டீ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
சனாதிபதி மாவத்தை
அ.பெ.883
கொழும்பு.1
2000.04.07

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## கரை கடந்த வங்கித் தொழில் வாணிபம்

1. 1995ஆம் ஆண்டின் வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வங்கித்தொழில் (கரை கடந்த வங்கித் தொழில் சட்டம்) கட்டளைக்கு (இதனகத்துப் பின்னர் "கட்டளை" எனக் குறிப்பிடப்படும்) இணங்க, இவ்வறிவுறுத்தல்களுக்குட்பட்டு கரை கடந்த வங்கித் தொழில் வாணிபத்தினை கொண்டு நடாத்துவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

2. கட்டனையின் பந்தி (2) இன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த பிரிவொன்றினால், குறித்துரைக்கப்பட்ட எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும், முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகள் நீங்கலாக இலங்கையிலிருந்து பொருட்களையும் பணிகளையும் ஏற்றுமதி செய்கின்ற, இலங்கையில் வதியும் ஏற்றுமதியாளருக்கு அல்லது அத்தகைய ஏற்றுமதியாளருக்கு துணைப் பொருட்களை வழங்குகின்ற முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளை மேற்கொண்டிராத, இலங்கையில் வதியும் ஒருவருக்கு வழங்கப்பட்ட எந்த ஒரு கடனும், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள் தொடர்பாக 03.07.1997 நாளிடப்பட்ட அறிவுறுத்தல் எண்கள் ஈசிடீ/ 02/ 97 (சிஅன்ட்எவ்) மற்றும் ஈசீடீ/ 03/ 97 (சிஅன்டஎப்) மற்றும் 31.07.1998 நாளிடப்பட்ட ஈசீ/ 02/ 98 (சீஅன்டஎவ்) என்பனவற்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க இருத்தல் வேண்டும் என்பதுடன் இது இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்படக் கூடிய அத்தகைய வரையறைகளை விஞ்சக்கூடாது என்பதும் மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளரினால் ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளுக்கான இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலுள்ள குறிப்புக்கள் கரைகடந்த பிரிவுகளுக்கான குறிப்புக்ககளாகவும் இருக்கும்.

3. (அ) கரைகடந்த வங்கித் தொழில் வாணிபத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கரைகடந்த பிரிவு ஒன்றினால் இந்த அறிவுறுத்தல்களின் பந்தி 2இல் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஏற்றுமதியாளராகவோ அல்லது அத்தகைய ஏற்றுமதியாளருக்கு பொருட்களின் வழங்குனராகவோ இல்லாதவிடத்து கட்டளையின் பந்தி 4 (i) இன் கீழ், வதிவுடையோர் ஒருவருக்கு வழங்கப்பட்ட வசதியொன்று இலங்கையில் அத்தகைய வதிவுடையோரின் தொழிற்பாடுகளுக்கு மட்டுமே நீடிக்கப்படுவதோடு ஏனைய எந்தவொரு நோக்கத்துக்காகவும் வழங்கப்படமாட்டாது.

(ஆ) துணைப் பந்தி (ஆ) இன் கீழ் வதிவுடைய ஒருவருக்கு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது கட்டளையின் பந்தி 4 (1)(ஈ) இன் கீழ் நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு எந்தவொரு வதிவுடையவரினாலும் வழங்கப்படுகின்ற கடன்வசதி மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய தொகையை விஞ்சக்கூடாது.

4. கட்டளையின் பந்தி 2 (2) இன் கீழ் அல்லது கட்டளையின் பந்தி 4இன் கீழ் கரைகடந்த பிரிவொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்குமிடத்து

(அ) நாணயக் கடிதமொன்றினை திறக்க, நிறுவ அல்லது அது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தால் கட்டளையின் பந்தி 4இல் குறித்துரைக்கப்பட்ட வதிவற்ற அல்லது வதிவுடையவரின் சார்பில் திறக்கலாம், நிறுவலாம் அல்லது அறிவுறுத்தல் வழங்கலாம்.

(ஆ) உத்தரவாதங்களை, இழப்பீடுகளை வழங்குதல் அல்லது புதுப்பித்தல் அல்லது அவை போன்றவற்றைப் பொறுப்பேற்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருப்பின் அத்தகைய உத்தரவாதங்கள் இழப்பீடுகள் அல்லது பொறுப்பேற்றல்கள் கட்டளையின் பந்தி 4இல் குறித்துரைக்கப்பட்ட வதிவற்ற அல்லது வதிவுடையவர்களுக்கு வழங்கப்படலாம்.

(இ) ஏற்கைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்ததனால் அத்தகைய ஏற்கைகள் கட்டளையின் பந்தி 4இல் குறித்துரைக்கப்பட்ட வதிவற்ற அல்லது வதிவுடையவர்களுக்காக பெற்றுக் கொள்ளப்படலாம்.

5. மத்திய வங்கியினால் கேட்டுக் கொள்ளப்படுமிடத்து இவ்வறிவுறுத்தல்களின்கீழ் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவினால் மேற் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அவசியமானதெனக் கருதப்படும் கூற்றுக்களையும் அறிக்கைகளையும் அத்தகைய கரைகடந்த வங்கிப் பிரிவு மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

6. இவ்வறிவுறுத்தல்களில் "முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகள்" "குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" "கரைகடந்த வங்கிப்பிரிவு" "வதிவுடையோர்" "வதிவற்றோர்" என விளக்கப்படுபவை கட்டளையின் பந்தி 9இல் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

7. (அ) நாணயச்சபையினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் முறை தொடர்பாக வழங்கப்பட்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளும் இங்கு அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவைகளும் இத்தால் புறக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) நாணயச் சபையினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் முறை தொடர்பாக துணைப்பந்தி (அ) இனால் மாற்றப்படாத மற்றைய அனைத்துத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் சுற்றறிக்கைகளும் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். அத்துடன் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளுடன் தொடர்பான இவ்வறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் கரைகடந்த பிரிவுகளுடன் தொடர்புபடுமிடத்து அவைவாசிக்கப்பட்டு அர்த்தப்படுத்திக் கொள்ளப்படலாம்.

(இ) துணைப் பந்தியினால் (அ) வினால் செய்யப்பட்ட புறக்கீடுகள் பின்வருவனவற்றை பாதிக்காது.

(i) மாறுதல்களுக்கு முன்னர் இவ்வறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் கீழ் இழைக்கப்பட்ட எந்த ஒரு குற்றமும் அல்லது எந்த ஒரு தண்டனையும் அல்லது உறப்பட்ட பொறுப்பும்;அத்துடன்

(ii) புறக்கீடு செய்யப்பட்ட நாளன்று உள்ள எந்த நடவடிக்கையும், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அல்லது நிலுவையிலுள்ள அல்லது நிறைவு பெறாத அத்தகைய நடவடிக்கை, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அல்லது நிலுவையிலுள்ள அல்லது நிறைவு பெறாத விடயங்கள், அத்தகைய அறிவுறுத்தல்களும் சுற்றறிக்கைகளும் தொடர்ந்தும் நடைமுறையிலிருப்பதாகக் கருதப்பட்டு அவை தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்படலாம்.

**வை. எம். இடபிள்யூ. பீ. வீரசேகர** — முதன்மைக் கணக்காளர்

**எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி** — செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

அட்டவணை

(1) 02.05.1979 நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 380 (எவ்சீபீஎஸ் 1/ 79)

(2) 17.05.1979 நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 381 (எவ்சீபீஎஸ் 2/ 79)

(3) (எவ்சீபீஎஸ் 3 / 79) மற்றும் 28.09.1979 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீசி 29/ 79

(4) 29.10.1979 நாளிடப்பட்ட (எவ்சீபீஎஸ் 4/ 79)

(5) 01.11.1979 நாளிடப்பட்ட (எவ்சீபீஎஸ் 5/ 79)

(6) (எவ்சீபீஎஸ் 6/79) - பீசி/எவ் 1049/79 மற்றும் 10.01.1980 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்ககள் பீடீ 40/ 79

(7) (எவ்சீபீஎஸ் 7/ 80) - பீசி/எவ் 1049/ 79 30.04.1980 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீடீ/ 18/ 80

(8) (எவ்சீபீஎஸ் 8/ 80) - பீசி/எவ் 1049/79 மற்றும் 14.05.1980 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீடீ/ 21/ 80

(9) (எவ்சீபீஎஸ் 9/ 84) பீசி/எவ் 1049/79 மற்றும் 13.11.1984 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீடீ 23/ 84

(10) (எவ்சீபீஎஸ் 10/ 89) பீசி/எவ் 1049/79 மற்றும் 31.01.1989 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீடீ 01/ 89

(11) 24.11.1993 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீடீ/ 15/ 93

தொடர்பு எண்: ஈசி/ 05/ 2000 (டீ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
சனாதிபதி மாவத்தை
அ.பெ.883
கொழும்பு.1
2000.04.07

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

## ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்கள்

போதுமானளவு வெளிநாட்டு நாணய உழைப்புக்களைக் கொண்டுள்ள, பொருட்களையும் பணிகளையும் ஏற்றுமதி செய்பவர்களுக்கு, அவர்களின் தொழிற்படு மூலதனம் மற்றும் நிலையான மூலதன தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தும் அதே போன்று உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்தும் வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட எனது 1997 சனவரி 3ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசிடீ/ 02/ 97/ (சி அன்ட எவ்) தொடர்பாக அத்தகைய கடன்களை தீர்ப்பதற்கு ரூபா நிதியத்தினை மாற்றுவதற்கான கோரிக்கைகளை எந்தவொரு சூழ்நிலையிலும் இலங்கை மத்திய வங்கி கருத்திற் கொள்ளாது என்ற நிபந்தனைகளின் கீழேயே இவ்வொப்புதல் வழங்கப்பட்டது.

2. மேலேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் வழங்கப்பட்டு செலுத்தத் தவறிய வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பொறுத்தவரை, வெளிநாட்டுச் செலாவயினைக் கருத்திற் கொண்டு ஈடு வைக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென இத்தால் நீங்கள் அறிவிக்கப்படுகின்றீர்கள். இவ்வழி முறை மேற்கொள்ளப்பட்டு வெற்றியளிக்காது இருக்குமாயின், அத்தகைய கடன்களுக்கான வழங்கப்பட்ட ஈடுகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் உள்நாட்டுச் சொத்துக்களை விற்பனை செய்தததன் மூலம் பெறப்பட்ட ரூபா விற்பனைப் பெறுகைகளை வெளிநாட்டு நாணயத்தில் மாற்றுவதற்கு எனக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

3. பொருட்கள் மற்றும் பணிகளை ஏற்றுமதி செய்பவர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணய வசதிகளின் பின்வருவனவற்றை எடுத்துக் காட்டும் காலாண்டுக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(i) கம்பனியின் பெயர்

(ii) கடன் வசதிகள் வழங்கப்பட்ட நாள்

(iii) கடன் வசதிகளின் வகைகள்

(iv) கடன் வசதி வழங்கப்பட்ட காலப்பகுதி

(v) பிணையின் தன்மை

(vi) தொகை

(vii) நோக்கம்

இக் கூற்றுக்கள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவு இலங்கை மத்திய வங்கி, அஞ்சல் பெட்டி 883, ஈகுயிட்டி இரண்டு கட்டடம், சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 என்ற முகவரிக்கு ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து உடனடுத்து வரும் மாதத்தில் 15ஆம் நாளுக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

படிகள்: ஆளுநரின் செயலாளர்

துணை ஆளுநர் (ஏ)

துணை ஆளுநர் (என்)

ஆளுநரின் உதவியாளர்

சட்ட ஆலோசகர்

வங்கித் தொழில் ஆலோசகர்

முதன்மைக் கணக்காளர்

பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்

வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்

தொடர்பு எண். ஈசி/ 06/ 2000 (சி அன்ட் எப்)

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
சனாதிபதி மாவத்தை
அ.பெ.883
கொழும்பு.1
10 மே 2000

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

## பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 28.07.1992 நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/ 74/ 92 (சி அன்ட் எப்) தொடர்பாக

2. 1992.07.28ஆம் நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/ 74/ 92 (சி அன்ட எப்) இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட " பங்கு முதலீட்டு வெள்நாட்டு ரூபாக் கணக்குகள்" திட்டம் 07.03.2000 நாளிடப்பட்ட எண் 1122/ 12 கொண்ட அதிசிறப்பு அரச வர்த்தமானியில் (இணைப்பு 1) என்னால் வழங்கப்பட்ட பொது ஒப்புதல் நியதிகளின்படி கூறுநம்பிக்கைகளில் உள்ள கூறுகளை வதியாதோருக்கு வழங்குவதற்கான கொடுப்பனவுகளுக்கும் மாற்றல்களுக்கும் 2000.03.07 ஆம் நாள் தொடக்கம் பிரயோகிக்கப்படக் கூடியதாக ஆக்கப்பட்டது என்பது இத்தால் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

3. வதிவற்றோருக்கு பங்குகளை வழங்குவது மற்றும் மாற்றல் செய்வது தொடர்பாக 29.06.1992 ஆம் நாளின் எண் 721/4 கொண்ட அதிசிறப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முன்னைய அறிவித்தலுக்கு இதே வர்த்தகமானியில் (இணைப்பு 1) என்னால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களும் 2000.03.07 ஆம் நாளிலிருந்து செயற்படும் என்பதையும் நான் இத்தால் உங்களுக்கு அறியத்தருகின்றேன்.

4. இத்திருத்தங்களின் நியதிகளில், கடன் வழங்கல் மற்றும் அடகு பிடித்தல் தவிர்ந்த நிதியியல் பணிகளை வழங்குகின்ற கம்பனிகளிலுள்ள பங்குகளை வதிவற்றோருக்கு வழங்கவும் மாற்றல் செய்யவும் பின்வரும் அ்ட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.

| வாணிபம் | கம்பனியின் வழங்கப்பட்ட மூலதனத்தின் சதவீதம் |
|---|---|
| வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட நிறுவனங்களினால் வங்கித் தொழில் | 60% |
| காப்புறுதி | 90% |
| பங்குத்தரகு | 49% அல்லது இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆனணக் குழுவினால் ஒப்புதல் வழங்கப்படுமிடத்து 100% |
| ஏனைய நிதியியல் பணிகள் | 49% |

5. ஒவ்வொரு வதிவற்ற முதலீட்டாளருக்கும் இணைப்பு 11இல் தரப்பட்டுள்ள வடிவமைப்பிலுள்ளவாறு ஒவ்வொரு முதல்தர பங்குவழங்கல் / கூறுகளின் கொள்வனவுகளிலுள்ள ஒதுக்கப்பட்டுள்ள பங்குகள் / கூறுகளின் பொருட்டு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான கூற்றுக்கள் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் 15 நாட்களுக்குப் பின்னால் இத் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

6. 28.07.1992 நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/ 74/ 92 (சி அன்ட எவ்) இல் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு ஒவ்வொரு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளுக்கும் செய்யப்பட்ட வைப்புக்கள் மற்றும் மீளப் பெறுகைகள் பற்றிய கூற்றினை ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலுமுள்ளவாறு அட்டவணை III இல் தரப்பட்டுள்ள வடிவமைப்பில், அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளுக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

7. மேலே (5) இலும் (6)இலும் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்கள் இச் சுற்றறிக்கையின் தொடர்பு எண்ணை மேற்கோள்காட்டி இத் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவிற்கு முகவரியிடப்பட வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,

எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

படிகள்: துணை ஆளுநர்

நிறைவேற்றுப் பணிப்பாளர்கள்

ஆளுநரின் உதவியாளர்கள்

ஆலோசகர்கள்

ஆளுநரின் செயலாளர்

பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்

வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்

முதன்மைக் கணக்காளர்

## பகுதி I : தொகுதி (I)
## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 423)

செலாவணிக் கட்டப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 7, 10, 15 மற்றும் 30 (5) இன் நியதிகளின்படியான அனுமதி

எண் 721/4 கொண்டதும் 1992 யூன் 29ஆம் நாளிடப்பட்டதுமான இலங்கை அரசாங்க (அதி விஷேட) வர்த்தமானியில் செலாவணிக் கட்டடுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

1. பந்தி 3 (ஆ) வினை நீக்கி பின்வரும் பந்திகளை பதலீடு செய்வதன் மூலம் -

"(ஆ) அத்தகைய வாணிபங்கள் தொடர்பாக சட்டத்தில் அல்லது சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கு முறைப்படுத்தும் வரையறைகள், தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கீழேயுள்ள அட்டவணையில் நிரல் 1இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் வாணிபங்களைக் கொண்டு நடாத்தும் அல்லது கொண்டு நடாத்த உத்தேசித்துள்ள கம்பனிகளின் வழங்கப்பட்ட மூலதனத்தின் அந்த சதவீதம் வரையில் மட்டுமே இத்தால் வழங்கப்பட்ட அனுமதி இயைபுடையதாகும்.

அட்டவணை

| 1 | 2 |
|---|---|
| வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வங்கித் தொழில் | 60% |
| காப்புறுதி | 90% |
| பங்குத்தரகு | 49% அல்லது இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆனணக் குழுவினால அனுமதி வழங்கப்பட்டிருப்பின் 100% |
| ஏனைய நிதியியல் பணிகள் | 49% |

" (இ) கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளவற்றுள் ஏதேனும் வாணிபங்களை கொண்டு நடாத்தும் அல்லது கொண்டு நடாத்த உத்தேசித்துள்ள கம்பனியொன்றின் பங்குகள் தொடர்பாக எந்த சதவீதத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அத்தகைய வாணிபங்களில் வெளிநாட்டு முதலீட்டின் ஒப்புதலுக்காக நிறுவப்பட்ட சட்ட அல்லது நிருவாக மேலாண்மையினால் பொது அல்லது விஷேட அனுமதி வழங்கப்பட்டுள்ளதோ கம்பனியின் வழங்கப்பட்ட மூலதனத்தின் அந்த சதவீதம் வரையில் மட்டுமே இத்தால் வழங்கப்பட்டுள்ள அனுமதி இயைபுடையதாகும்.

(i) விமானப் போக்குவரத்து;

(ii) கரையோரக் கப்பற் சேவை

(iii) 1990 இன் 46ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் முயற்சிகள் அவையாவன

(அ) ஆயுதங்கள், படைக்கல பொருட்கள், வெடிப் பொருட்கள், இராணுவ வாகனங்கள், உபகரணங்கள், வானூர்திகள் மற்றும் இராணுவ வன்கலப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஏதேனும் கைத்தொழில்;

(ஆ) நச்சுப் பொருட்கள், போதைப் பொருட்கள், மதுசாரம், அபாயகர ஒளடதங்கள், நச்சுத் தீங்குப் பொருட்களும் தீங்கு விளைவிக்கின்ற அல்லது புற்று நோயினை விளைவிக்கின்ற பொருட்கள் ஆகியவற்றை தயாரிக்கும் ஏதேனும் கைத்தொழில்;

(இ) நாணயத்தாள் நாணயக் குத்திகள் மற்றும் பிணைய ஆவணங்களை உற்பத்தி செய்யும் ஏதேனும் கைத்தொழில்கள் :

(iv) சக்திவலு மற்றும் மின்சாரத்தின் உற்பத்தியும் பகிர்ந்தளிப்பும்;

(v) பாரிய அளவில் இயந்திரமயப்படுத்தப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு

(vi) லொத்தர்கள்

2. பந்தி 4இன் பின்னால் பின்வரும் புதிய பந்தியான 4 அ வினை புகுத்துவதன் மூலம்

" 4அ இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு கொடுப்பனவுக்கான அனுமதி இதன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் ஒன்று தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு ஏதேனும் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு அல்லது கணக்கில் வரவு வைப்பதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றதுடன் அத்தகைய கொடுப்பனவுகள் பந்தி 4(இ) வின் ஏற்பாடுகளுக்கு இணங்க மட்டுமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

எச்.ஏ.ஜீ. எட்டியாரச்சி

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2000 மார்ச்சு 7ஆம் நாள்

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (இலங்கை சட்டவாக்கங்கள் அத்தியாயம் 423) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 7, 10, 11, 15 மற்றும் பிரிவு 30 உபபிரிவு (5) இன் நியதிகளின் படியான அனுமதி

1. (அ) கூறு நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கும் ஆவணமும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் முகாமைத்துவக் கம்பனிக்கும் இடையிலான ஒப்பந்தமும் வைப்புச் செய்யப்பட்ட சொத்தில் 20 சதவீதத்துக்கு மேலானவை அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யப்படலாகாது என்ற கட்டுப்படுத்தலைக் கொண்டிருக்குமாயின், இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களுக்கு 1991இன் 26ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987இன் 36ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் மீது தொழிற்படும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் கூறுகளின் வழங்கலுக்கும் மாற்றலுக்குமாக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு (இலங்கைச் சட்டவாக்கங்கள் அத்தியாயம் 423) இயைபுள்ள வகையில் பிரிவு 10, 11, 15 மற்றும் 30 உபபிரிவு (5) இன் நோக்கங்களுக்காக பந்தி 2இல் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு உபபிரிவு (அ)வின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்று தொடர்பாக ஏதேனும் கொடுப்பனவினை மேற்கொள்ளுவதற்கு அல்லது கணக்கில் வரவு வைப்பதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுவதுடன் பந்தி 2(இ) இற்குப் பொருத்தமான முறையில் மட்டுமே அத்தகைய கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. நிபந்தனை

(அ) இதன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்கான தரப்பினர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவர் கூறுகளின் கொள்வனவுக்காக விண்ணபத்தில் அத்தகைய ஆள் இலங்கைக்கு வெளியே வசிப்பவர் என்பதற்கான வெளிப்படுத்தலை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் வழங்கல் ஒன்றில் கூறுகளின் கொள்வனவிற்காக அல்லது இதன்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்கான கொடுப்னவானது செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அது சார்பாக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளுக்குப் பொருத்தமான வகையில், இலங்கையின் வர்த்தக வங்கி ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிலிருந்தும் கணக்கிற்கு மட்டுமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(இ) மீட்புப் பெறுதிகள், விற்பனைப் பெறுதிகள், இதன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பணங்கள் அல்லது தரகுக் கட்டணங்கள் போன்ற பணங்களின் கொடுப்பனவுக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட முகாமைக் கம்பனி ஒன்று, நம்பிக்கைப் பொறுப்பாளர், வர்த்தக வங்கி, உரிமம் வழங்கப்பட்ட தரகர் அல்லது ஏதேனும் ஆள் ஒருவர் மேலே உபபந்தி (ஆ) வில் குறிப்பிடப்பட்ட பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கும் அல்லது கணக்கிலிருந்தும் மட்டுமே அத்தகைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஈ) கூறுகளை வைத்திருப்போரின் அல்லது ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பினால் மேற்கொள்ளப்படும் வழங்கல் அல்லது கூறுகளின் மாற்றல் தொடர்பாக பதிவேடு ஒன்றினைப் பேணும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கம்பனி ஒன்று அல்லது வேறு ஏதேனும் ஆள் ஒருவர் இந்த அறிவித்தலின் நியதிகளுக்கிணங்க அத்தகைய வழங்கல்களுக்கு இயையுடைய நியதிகளும் நிபந்தனைகளுக்கும் இசைவாக அத்தகைய ஆள் காணப்படுகின்றார் என்பதைத் திருப்திப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி இலங்கைக்கு வெளியே வதியும் ஏதேனும் ஆள் ஒருவரை அல்லது வெளிநாட்டுப் பிரசை ஒருவரை அல்லது அவர்களினால் நியமிக்கப்பட்டவர்கள் எவரினது பெயரையும் பதிவு செய்தலாகாது.

3. பொருள் காணல்

(அ) "கூறு நம்பிக்கைப் பொறுப்பு" "முகாமைத்துவக் கம்பனி" "நம்பிக்கைப் பொறுப்பாளர்" மற்றும் "கூறு வைத்திருப்பவர்" என்பன 1991இன் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987இன் 36ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தில் காணப்படுவதைப் போன்ற அதே பொருளையே கொண்டிருக்கும்.

(ஆ) "வைப்புச் செய்யப்பட்ட சொத்துக்கள் " என்பது கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஆவணத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு கூறு நம்பிக்கைப் பொறுப்பின் சார்பாக நிம்பிக்கைப் பொறுப்பாளரினால் தற்போதைக்கு வைத்திருக்கப்படும் அல்லது வைத்திருப்பதாகக் கருதப்படும் அனைத்துச் சொத்துக்களும் என பொருள்படும் எனினும் பகிர்ந்தளிப்புக் கணக்கில் வரவு வைப்பதற்காக தற்போதுள்ள எந்தத் தொகையினையும் உள்ளடக்கமாட்டாது.

**எச்.ஏ.ஜீ. எட்டியாரச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு

2000ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந் திகதி

இணைப்பு II

# பங்குகள்/ கூறுகளின் ஆரம்ப வழங்கலுக்குரிய உதவு தொகைகளாகப் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கூற்று

கம்பனியின் பெயர்: ..........................................................................................

| வதிவற்ற முதலீட்டாளர்களின் பெயர்களும் வதியும் நாடும் | பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளூடாக அனுப்பப்பட்ட வெளிநாட்டு நாணயதின் தொகை | ஒதுக்கப்பட்ட பங்குகள்/ கூறுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கூறுக்கு செலுத்தப்பட்ட பெறுமதி (இலங்கை ரூபா) | இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் தொகை | மீளளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களின்

கையொப்பமும் முத்திரையும்

## பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள்

20 ..... ஆம் ஆண்டு ............... மாதத்திற்கான கணக்குகளின் கூற்று

கணக்கின் பெயர் :.......................................................... கணக்கு இல: ..............................

| நாள் | விபரம் | வைப்பு ரூபா | மீளப்பெறுகை ரூபா | மீதி ரூபா |
|---|---|---|---|---|
| | | | | |

..................
நாள்

..............................
அங்கீகரிக்கப்பட்ட வணிகரின் கையொப்பம்

கவனிக்கவும்: வைப்புக்கள் மற்றும் மீளப் பெறுகைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

வைப்புக்கள்:

உள்வரும் பணவனுப்பல்கள், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்/ வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்தான மாற்றல்கள், பங்குகள்/ கூறுகளின் மீட்புகளின் விற்பனைப் பெறுகைகள், பெறப்பட்ட பங்கிலாபங்கள், பெறப்பட்ட தரகுகள் என்பன.

மீளப் பெறுகைகள்:

பங்குகள்/ கூறுகளின் கொள்வனவுகள், பங்குகள்/ கூறுகளின் மீட்புக்களின் விற்பனைப் பெறுகைகளின் பண அனுப்பல்கள், பங்கிலாபங்களின் பணவனுப்பல்கள், தரகுகளின் பணவனுப்பல்கள், தரகுகளின் பணவனுப்பல், தரகுகளின் கொடுப்பனவு, கணக்கு வைத்திருப்போர் இலங்கையில் செலவிடும் தொகை, வங்கிக் கட்டணங்கள் போன்றன.

தொடர்பு எண். ஈசி/ 07/ 2000 (டீ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு.1
19.05.2000

**அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

உள்நாட்டு வங்கித் தொழில் முறையில் பேணப்படும் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பாக மாற்றல்கள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது என அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இக்கணக்குகள் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவுடையோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவுடைய இந் நாட்டினர் அல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் சுற்றுலா விடுதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்கும். நிதியங்கள் சுதந்திரமாக மாற்றல் செய்யக்கூடியதாக இருப்பது உட்பட இக் கணக்குகளை தற்பொழுது வைத்திருப்பவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்து வசதிகளும் மாற்றமின்றியிருக்கும்.

உங்கள் உண்மையுள்ள,

**எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

படிகள்: துணை ஆளுநர்கள்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
ஆளுநரின் உதவியாளர்கள்
ஆலோசகர்கள்
பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
முதன்மைக் கணக்காளர்
ஆளுநரின் செயலாளர்

தொடர்பு எண். ஈசி/ 08/ 2000 (ஜீ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு.1
2000.08.03

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

**சரக்குகளை கப்பலேற்றும் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம்/ உள்நாட்டுப் பொருட்களின் ஏற்று முறி/ வெளிநாடுகளுக்கு சரக்குகளை கப்பலேற்றுபவர்களின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களை வழங்குதல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 12.07.1991 நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/ 48/ 91 (ஜீ) மற்றும் 1997 மாச்சு 4ஆம் நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/ 04/ 97 (ஜீ) என்பனவற்றிற்கு மேலதிகமாக, தற்பொழுது மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள பின்வரும் சரக்கு அனுப்புபவர்களை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள சரக்கு அனுப்புபவர்கள் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களினால் வழங்கப்பட்ட வான் வழிப்பட்டியல்கள்/ பொருட்களை கப்பலேற்றியதற்கான பட்டியல்கள்/ சரக்குகளைக் கப்பலேற்றுபவர்களின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளுமாறும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

| | சரக்குகளைக் கப்பலேற்றுபவர்களின் பெயர் | பதிவு எண் |
|---|---|---|
| 1. | வரையறுக்கப்பட்ட எம்ஏசி ஏஜன்சீஸ் (பிறைவேட்) | 06/ 07/ 009/ 0091 |
| 2. | வரையறுக்கப்பட்ட றிபப்ளிக் காகோ சிஸ்டம்ஸ் (பிறைவேட்) | 06/ 07/ 009/ 0092 |
| 3. | வரையறுக்கப்பட்ட எம்சிஎஸ் லொஜிஸ்டிக் இன்ரனேசனல்(பிறைவேட்) | 06/ 07/ 009/ 0093 |

உங்கள் உண்மையுள்ள

**எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு எண். ஈசி/ 09/ 2000 (எம்யூ)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு.1
18.09.2000

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

## வெளிநாட்டுச் செலாவணி விற்பனையும் கொள்வனவும் படிவம் 1 மற்றும் படிவம் 2 இனை சமர்ப்பித்தல்

படிவம் 1 மற்றும் படிவம் 2 இனை சமர்ப்பிப்பது தொடர்பாக 24.12.98 நாளிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/ 07/ 98 எம்யூ கொண்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தலின்பால் உங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட வணிகரொருவரினால் ஐ.அ.டொலர் 5,000 இற்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான மற்றைய வெளிநாட்டு நாணயச் செலாவணியினைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணியை விற்பனை செய்பவர்களை படிவம் 2இனை பூர்த்தி செய்யுமாறு கேட்கும் தேவை அவசியமற்றதுஎன தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. பதிலாக அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய அனைத்துக் கொள்வனவுகளையும் வாராந்த அடிப்படையில் பின்வரும் விபரங்களைத் தரும் விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் தாங்களாகவே தயாரித்த ஒன்றுதிரட்டப்பட்ட கூற்று ஒன்றில் அறிவித்துக் கொள்ள முடியும்.

(1) பணமனுப்பியவரின் பெயரும் முகவரியும் (காசாக மாற்றிக் கொள்ளுமிடத்து இது அவசியமற்றது)

(2) பணம் பெறுபவரின் பெயரும் முகவரியும் (காசாக மாற்றிக்கொள்ளுமிடத்து வெளிநாட்டு நாணயத்தினை மாற்றிக் கொள்ளும் ஆளின் பெயரும் முகவரியும்.)

(3) கொள்வனவு செய்யப்பட்ட நாள்

(4) தொடர்பான பணம் பெறுநரின் கடவுச்சீட்டு எண் அல்லது தேசிய அடையாள அட்டை எண்

(5) கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தொகை

உங்கள் உண்மையுள்ள,

எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

படிகள்: துணை ஆளுநர்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
ஆளுநரின் உதவியாளர்கள்
ஆலோசகர்கள்
பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
முதன்மைக் கணக்காளர்
ஆளுநரின் செயலாளர்